ரூ. 8.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்



திருவள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாசி - கார்த்திகை

அக்டோபர் - டிசம்பர் 2016

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



மறைந்தும் மறையாத
உலகத் திருக்குறள் பேரவை
முதன்மைப் பொதுச் செயலாளர்

ந. மணிமொழியன்

அவர்களுக்கு "மக்கள் சிந்தனை" யின்
அஞ்சலி

மக்கள் சிந்தனை

நிறுவனர் : **தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

திருவள்ளுவர் ஆண்டு 2047   மாதம் : புரட்டாசி - கார்த்திகை

மலர் : 30   இதழ் : 9 - 11



ஏழை மக்களின் உயிர்த்துடிப்பு அடங்கிவிட்டது

தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா

ஜெ. ஜெயலலிதா அவர்கள் மறைவிற்கு

நமது சிறப்பாசிரியர் அவர்களின் இரங்கல் செய்தி

“அம்மா” என்ற அந்த அன்புச் சொல், தமிழக மக்களின் உள்ளங்களில் உலா வந்த அந்த உயிர்ச்சொல், ஏழை மக்களின் உயிர்த் துடிப்பு அடங்கிவிட்டது.

கண்ணை இமை காப்பதுபோல் தமிழக மக்களைச் சுமந்த அந்த தோள்கள் சாய்ந்து விட்டன,

“மக்களால் நான்! மக்களுக்காக நான்” என்ற வற்றாத ஜீவநாதம் அடங்கிவிட்டது.

ஒற்றை மனுஷியாய் சோதனைகளைச் சாதனைகளாக ஆக்கிய – தோல்விகளை, தடைகளை படிக்கட்டுகளாக ஆக்கிய தன்னம்பிக்கையின் தனி உருவம் பொய்த்துவிட்டது!

"மக்களால் நான் மக்களுக்காக நான்" என்று மக்களை ஆண்ட மாதரசி விண்ணை ஆள விண்ணரசு போய்விட்டார்!

ஆம்! இன்று மக்களோடுதான் இருக்கின்றார், அன்றாடம் அவர் நலம்பெற பிரார்த்தித்த மக்களின் பிரார்த்தனைகளில்!

தாயை இழந்த குழந்தைகள் அழும் அழுகையைப்போல அவரை இழந்து அழும் மக்களின் கண்ணீரில் காட்சி தருகின்றார் அம்மா! இப்போது அனைவரையும் காக்கும் அன்னை ஆகிவிட்டார்!

தாயை இழந்த குழந்தைகள் போல் அவர் மறைவால் துயருற்றிருக்கும் தமிழக மக்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறைவனின் திருவடி நிழலில் அவரது ஆன்மா அமைதி பெற பிரார்த்திக்கின்றோம்.

[signature]

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
திருவெம்பாவை

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்!
உன்னடியார் தாள்பணிவோம்! ஆங்கவர்க்கே பாங்காவோம்!
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து,
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்!
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்,
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்! (பா.9)

91/1

குழந்தைகளே இலக்கியம்!

குழந்தைகளுக்கான இலக்கியக் கருத்தரங்கம் குன்றக்குடியில் சாகித்ய அகாதெமி நமது குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரியோடு இணைந்து 22.10.2016இல் நடத்தியது. குழந்தைகளே ஒரு இலக்கியம். பிறகு அவர்களுக்கு என்று தனியே இலக்கியம் தேவையா? என்ற சிந்தனை எழுகின்றது.

தத்தித் தத்தித் தளிர்நடையிடும் மழலைச் சொல் பேசும் சொற்கள் குழலினும், யாழினும் இனிதாக விளங்குகின்றது என்று திருவள்ளுவர் கூறுகின்றார்!

"குழலினி தியாழினி தென்பதம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர்."

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்

சிறுகை அளாவிய கூழ்."

- அமிழ்தினும் இனியது தம் மக்களின் தம் தளிர்க்கரங்களால் ஊட்டுவது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய் மழலைச் செல்வங்கள் விளங்குகின்றன.

உலகத்தில் எல்லா இசையினும் உயர்ந்த இசை மழலைச் செல்வத்தின் இனிய சொற்கள்.

"குழந்தைகளுக்கு இதயத்தைக் கொடுங்கள்" என்றான் சோவியத் சிந்தனையாளன் சுகோம்லின்ஸ்கி. குழந்தைகளுக்கு அறிவைக் கற்றுக் கொடுப்பதோடு அன்பையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

குழந்தைகள் அதிபுத்திசாலிகள்! அவர்களின் புத்திக் கூர்மையை நாம் அளவிடமுடியாது. ஒரு வகுப்பறை ஆசிரியர் ஒரு கணக்கு போட்டார்.

"என்னிடம் 11 ஆப்பிள்கள் உள்ளன. 12 பேருக்கு சரிசமமாக கொடுக்க வேண்டும். எப்படி கொடுப்பது?" என்று கேட்டார்.

பல குழந்தைகள் 11ஐ 12ஆல் வகுத்துப்பார்த்தார்கள். ஒரு குழந்தை வித்தியாசமாக சிந்தித்துப் பதில் கூறியது.

"11 ஆப்பிளையும் பழச்சாறு ஆக்கி 12 குவளைகளில் சரி சமமாக ஊற்றிக் கொடுப்பேன்" என்று கூறியது.

எவ்வளவு வித்தியாசமாக, கூர்மையாக குழந்தைகளின் சிந்தனைத்திறன் இருக்கின்றது என்பதற்கான உதாரணம்.

ஒரு பெரிய குழந்தை சின்னக் குழந்தை ஒன்றை இடுப்பில் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வந்தது.

"சின்னப் பாப்பாவைத் தூக்குவது உனக்கு சிரமமாக இல்லையா?" என்று ஒருவர் கேட்க, அந்தக் குழந்தை சொன்னது,

"என் தம்பியை தூக்குவது எப்படி எனக்குச் சிரமமாக இருக்கும்?" என்றது. குழந்தைகள் இயல்பிலேயே அன்பு வயப்பட்டவர்கள்.

அமெரிக்காவில் ஒரு குழந்தை தன் அப்பாவிடம் ஒரு நாள் கேட்டது.

"அப்பா! உன் ஒருநாள் சம்பளம் எவ்வளவு?" என்று!

அப்பா அலுவலகம் போகின்ற அவசரத்தில் குழந்தையின் கேள்வியை அலட்சியப்படுத்திவிட்டார். மாலை அலுவலகம் விட்டு வந்தவுடன் அதே கேள்வியை குழந்தை அப்பாவிடம் கேட்டது.

"அப்பா உன் ஒரு நாள் சம்பளம் எவ்வளவு?" என்று. அப்போதும் அப்பா அந்தக் கேள்வியைப் பொருட்படுத்தவில்லை. இரவு உணவு மேசையில் அதே கேள்வியைக் குழந்தை கேட்டது. அப்பா கோபமாக குழந்தையிடம்,

"என் சம்பளத்தை பற்றி உன் அம்மா சந்தேகப்பட்டு உன்னைக் கேட்கச் சொன்னாளா?" என்று ஓங்கி அறைந்துவிட்டார். குழந்தை அழுதுகொண்டே ஓடிப்போனது. நள்ளிரவு குழந்தையின்

நினைவு வர குழந்தை இருக்கும் அறைக்குப் போய்ப் பார்த்தார்! குழந்தை அப்பொழுதும் "அப்பா! உன் ஒரு நாள் சம்பளம் எவ்வளவு?" என்று அழுதுகொண்டே கேட்டது.

"கண்ணே! என் சம்பளத்தை நீ தெரிந்துக்கொள்ள வேண்டுமா? என் ஒரு நாள் சம்பளம் 40 டாலர்" என்றார் அப்பா!

"ஐந்து டாலர் குறைகிறது அப்பா" என்று குழந்தை கூறியது. சத்தியமாக என் ஒருநாள் சம்பளம் 40 டாலர்தான்" என்று அப்பா குழந்தையின் தலையில் சத்தியம் செய்தார்.

"அப்பா! நீங்கள் சம்பளத்தைக் குறைத்து சொல்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. என் சேமிப்புப் பணம் இப்பொழுது 35 டாலர் இருக்கின்றது. ஒருநாள் முழுவதும் நீங்கள் எனக்கு அப்பாவாக இருக்க வேண்டும் என்றால் நான் உங்களுக்குக் கட்டவேண்டிய ஒருநாள் சம்பளம் 40 டாலருக்கு, என்னிடம் 5 டாலர் குறைவாக இருக்கிறது அப்பா..." என்று குழந்தை கூறியதும் குழந்தையைக் கட்டி அணைத்துக் கொண்டு அப்பா கதறி அழுதார்! இதுதான் அன்பு!

ஒரு அப்பா புதிய கார் ஒன்றை வாங்கி, அன்று தன் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வந்தார். அவரது செல்லமகள் தன் அப்பாவின் புதிய காரைச் சுற்றிச் சுற்றிப் பார்த்து விட்டு புதிய காரின் பின்புறம் ஒரு இரும்பு ஆணியால் ஏதோ கிறுக்கி விட்டது. இரும்பு ஆணியின் கிறுக்கலால் புதிய காரின் வண்ணம் சேதப்பட்டது. அப்பாவுக்கு வந்த கண்மண் தெரியாத கோபத்தில் கிறுக்கிய குழந்தையின் பிஞ்சுக் கையை நசுக்கி விட்டார். குழந்தையின் கை நைந்த பிறகு இயல்பு நிலைக்கு திரும்பிய அப்பா குழந்தையை மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தார். நைந்துபோன குழந்தையின் கையைக் காப்பாற்ற மருத்துவர்கள் போராடினார்கள்.

"குழந்தையின் அழகிய கையை சிதைத்த காட்டுமிராண்டி யார்?" என்று மருத்துவர் கோபமாகக் கேட்டார். அப்பா, கண்களில்

நீர் கொட்ட எதுவும் பேசமுடியாமல் இருந்தார்! குழந்தையின் கை காப்பாற்றப்பட்டது. வீட்டுக்கு வந்து கலங்கிய கண்களால் புதிய காரின் பின்பகுதி தூசியைத் தட்டினார். அந்த தூசியினை விரல்களால் துடைத்த பின் கிறுக்கல் தெரிந்தது. இரும்பு ஆணியால் குழந்தை கிறுக்கிய கிறுக்கல் என்ன என்று உற்றுப் பார்த்தார். குழந்தை கிறுக்கிய கிறுக்கல் இதுதான்!

"Dady I Love you!" அப்பா உன்னை நேசிக்கின்றேன்! குழந்தையின் கிறுக்கலா அது? இல்லை. அப்பாவை நேசித்த அந்த குழந்தையின் இதய ஓவியம்!

வயது முதிர்ந்த அப்பா ஒருவரை தன் இல்லத்தில் வைத்துப் பராமரிப்பது சுமை என்று கருதி ஒரு காப்பகத்தில் அப்பாவை சேர்க்க மகன் அழைத்து வந்தார்.

தான் பெற்ற மகனை பள்ளியில் சேர்க்க, கல்லூரியில் சேர்க்க, பல்கலைக்கழகத்தில் படிக்க வைக்க, அவனுக்கு நல்ல வேலை வாங்க என அல்லல்பட்ட அப்பாவை வயது முதிர்ந்த காலத்தில் முதுமையின் பரிசாக காப்பகத்தில் சேர்க்க மகன் அழைத்து வருகின்றார். அந்தக் காப்பகத்தை நிர்வகிப்பவர் ஒரு அருட்துறவி!

அவரிடம் மகன் "என் அப்பாவுக்கு வசதியான அறையாகக் கொடுங்கள். அதற்கு எவ்வளவு கட்டணம் வேண்டுமானாலும் கட்டுகின்றேன்" என்றார். அப்பாவையே சுமையாக நினைத்து காரிலிருந்து அப்பாவின் சுமைகளை எடுத்து வைக்க வரும்பொழுது, அப்பாவும் அருட்துறவியும் நெருக்கமாக பேசுவதை உற்றுப்பார்த்தார் மகன்!

"என் அப்பாவை உங்களுக்கு முன்னரே தெரியுமா? என் அப்பா உங்களிடம் என்ன சொன்னார்?" என்று ஆர்வமாக மகன் கேட்டார்.

"உன் அப்பாவை எனக்கு முன்னரே தெரியும்" என்றார் அருட்துறவி.

"எப்படித் தெரியும்?" என்று மகன் கேட்டான்.

25 ஆண்டுகளுக்கு முன்பு இதே அனாதை விடுதியில் ஒரு குழந்தையை உன் அப்பா தத்து எடுத்துக்கொண்டு போனார். இன்று அதே விடுதியில் உன் அப்பாவை நீ அனாதையாகக் கொண்டுவந்துச் சேர்க்கிறாய். உன் அப்பா தத்து எடுத்து சென்ற குழந்தை நீதான்! அதை உன்னிடம் கூறிவிடவேண்டாம் என்று என்னிடம் சத்தியம் வாங்கினார்.

பெற்றோர்களின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஏங்கும் குழந்தைகள், பெற்றோர்களை பாரமாய், சுமைகளாய் நினைக்கின்ற குழந்தைகள் இவைகளுக்கிடையேதான் சமூகம் தடுமாறிக்கொண்டிருக்கின்றது.

குழந்தைகள் மலர்கள்! அவர்களை கசக்கிவிடாதீர்கள்!

குழந்தைகள் ஓவியம்! அவர்களை கலைத்து விடாதீர்கள்!

குழந்தைகள் கண்ணாடி! அவர்களை உடைத்து விடாதீர்கள்!

குழந்தைகள் புத்தகம்! அவர்களை கிழித்து விடாதீர்கள்!

பெற்றோர்கள் குழந்தைகளிடம் அன்பையும், அரவணைப்பையும் காட்ட வேண்டும்.

இளைஞர்களும் தங்களைப் பெற்ற வயது முதிர்ந்த பெற்றோர்களைக் குழந்தைகளாகப் போற்ற வேண்டும்!

அவையில் முந்தியிருக்கச் செய்த தந்தைக்கு செய்யும் கைம்மாறு "இவன் தந்தை என் நோற்றான் கொல் என்னும் சொல்" என்பதே ஆகும்.

கொண்டும் கொடுத்தும் வாழும் வாழ்க்கையை வாழ்வோமாக!

என்றும் வேண்டும் இன்ப அன்பு

திருக்குறள் செம்மல் புகழ் வாழி!

உலகத் திருக்குறள் பேரவைப் பொதுச் செயலாளர் திருக்குறள் செம்மல் திரு. ந. மணிமொழியன் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். மகாசன்னிதானம் காலம் தொட்டு இன்று வரை அவர் திருக்குறள் பேரவை வழியே ஆற்றி வந்த திருக்குறள் பணிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கத் தக்கவை. திருக்குறள் பணிகளை தாம் வாழ்நாளின் தவமாகச் செய்தவர். திருக்குறள் செம்மல் மணிமொழியன் அவர்கள் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டம் கொட்டக்குடியில் பிறந்தவர். திருக்குறள் பணிகளின் வாயிலாக உலகம் முழுவதும் அடையாளம் காணப்பட்டவர். மலேசியா, சிங்கப்பூர், லண்டன் முதலிய நாடுகளுக்குச் சென்றவர்.

லண்டனில் நடைபெற்ற உலகத் திருக்குறள் பேரவைக் கூட்டத்திற்கு, திருக்குறள் பேரவையின் பிரதிநிதியாகச் சென்று திருக்குறள் பணிகளைச் செய்துள்ளார். மதுரையில் பல திருக்குறள் மாநாடுகளை மிகச் சிறப்பாக நடத்தினார். இன்சொல்லினர்! முகம் மலர்ந்து இனிய சொற்களைக் கூறி விருந்து உபசரித்தவர். திருக்குறள் செம்மல் மணிமொழியனின் நிறுவனமான நியூ காலேஜ் ஹவுஸில் செவிக்கு உணவும், வயிற்றுக்கு உணவும் ஒருசேர பரிமாறப்படும். நான்மாடக்கூடலின் நற்றமிழ்ச் சங்கத்தினை, திருக்குறள் செம்மல் மணிமொழியன் இயக்கினார். அவர் மறைந்தார். நம்மால் நம்பமுடியவில்லை!மறைந்த அதிர்ச்சிச் செய்தி கேட்ட நாளன்று மாலையே புதுக்கோட்டை மாவட்டத் திருக்குறள் பேரவை மாணவர்களுக்கான கூட்டம். நாமும் உடன் இருந்து அவரின் மறைவுக்கான இரங்கல் கூட்டமாக புகழ் அஞ்சலி செலுத்தினோம். ஆன்மீகப் பணிகளைச் சிறப்பாக செய்தவர். கொட்டக்குடித் திருக்கோயிலுக்கு மூன்று முறை திருப்பணிகளை நிறைவேற்றிக் குடமுழுக்குச் செய்தவர். குன்றக்குடி ஆதீன விசாக விழாவில் “குறட்பணி அரசு” விருது அளித்து மகிழ்ந்தோம்.திருக்குறள்

செம்மல் ந. மணிமொழியன் பணிகள் கணக்கில் அடங்கா. எடுத்துரைப்பது மிகக் கடினம். அன்பின் வடிவம்! ஆற்றலின் இருப்பிடம்! இனிய சொல்லின் பிறப்பிடம்!ஈகையின் இருப்பிடம்! உண்மையின் உறைவிடம்!உழைப்பின் உயர்விடம்!அவர்தாம் திருக்குறள் செம்மல் மணிமொழியன் என்ற அன்பின் முழுவடிவம்!30.11.2016 ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற திருக்குறள் செம்மல் மணிமொழியன் புகழ் அஞ்சலிக் கூட்டத்தில் உலகத் திருக்குறள் பேரவை சார்பாக திருக்குறள் செம்மல் மணிமொழியனார் பெயரில் திருக்குறள் பணிகள் ஆற்றும் தக்கச் சான்றோர்களுக்கு விருதுகள் வழங்குவது என அறிவித்துள்ளோம்.

செயற்கரியச் செய்வர் பெரியர் என்ற திருக்குறளின் அருமை இலக்கணம் திருக்குறள் செம்மல் மணிமொழியனார். திருக்குறள் பரப்புவதில் தொண்டருக்குத் தொண்டராய், அறிஞருக்கு அறிஞராய் விளங்கியவர். “இருவே றுலகத் தியற்கை திருவேறுதெள்ளிய ராதலும் வேறு”என்ற திருக்குறளைப் பொய்யாக்கியவர். அறிவும் செல்வமும் எதிரெதிர் திசையில் இருக்கும் என்பதையும் பொய்யாக்கியவர். அறிவையும், செல்வத்தையும் இரு விழிகளாகக் கொண்டவர். அறிவுடையார் எல்லாம் உடையார் என்ற திருக்குறளை உண்மையாக்கியவர். அவர்தம் மறைவினால் வாடும் அவர்தம் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். திருக்குறள் செம்மல் மணிமொழியனார் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றப் பாடுபடுவோம்.

வருமுன் காப்பது என்ற கொள்கையைக் கடைப்பிடித்தால் நேரமும் வீணாகாது; அவசர வேலைகள் எவையும் உருவாகமாட்டா. வியாதி வராமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தடுப்பு ஊசி போட்டுக் கொள்வது போல வருமுன் காப்பது நல்ல பயன் தரும். - முனைவர்.ச.முத்துக்குமரன்

திருக்குறள் ஒளி அமரர் கோபி. க.அரங்கசாமி புகழ் பல்லாண்டு வாழி!

கோபி மாவட்டத் திருக்குறள் பேரவை தலைவர் பேராசிரியர் அரங்கசாமி மறைந்தார்!

நம் நெஞ்சங்களில் நிறைந்தார்!

கொங்கு மண்டலத்தின் அணையாத் தமிழ் விளக்கு அணைந்து விட்டது!

சங்க இலக்கியம், கீழை நாட்டு இலக்கியம் என்று பன்முகப் பரிமாண இலக்கியத் தோய்வு நிறைந்த அந்த இலக்கிய இதயம் தம் துடிப்பை நிறுத்திக் கொண்டது.

எந்நேரமும் திருக்குறளுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் சிந்தித்த சிந்தனையை நிறுத்திக்கொண்டார்!

திருக்குறளுக்காக உழைத்த கரங்கள் மடங்கிவிட்டன!

திருக்குறளுக்கு ஓடி உழைத்த கால்கள் ஓய்ந்துவிட்டன!

என்ன செய்வோம்! இனி என்ன செய்வோம்!

இளைஞர்களிடம், மாணவர்களிடம், பெண்களிடம், பெரியவர்களிடம், குழந்தைகளிடம் திருக்குறளை எடுத்துச் சென்ற திருக்குறள் ஒளி அணைந்து விட்டது.

இனி என்று காண்போம், இப்படி ஒரு மகத்தான மனிதரை?

சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடில்லாத தவவாழ்வு - தமிழ்வாழ்வு, அரங்கசாமி ஐயா அவர்கள் வாழ்வு!

எளிமை, நேர்மை, உண்மை, அடக்கம், அன்பு, அறிவு ஆகியவற்றின் ஒட்டுமொத்த அடையாளம் பேரறிஞர் அரங்கசாமி அவர்கள்.

திருக்குறள் பேரவையின் தூண்கள் தொடர்ந்து சரிந்த வண்ணம் உள்ளன!

"நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாகாடும்
வித்தகர்க் கல்லால் அரிது." — என்ற திருக்குறளின் இலக்கணமாகத் தூய திருக்குறள் வாழ்வு வாழ்ந்த - மறைந்து நம் நெஞ்சங்களில் நிறைந்த அந்தத் தலைமகன் - தமிழ் மகன் எடுத்துச் சென்ற திருக்குறள் பணியைத் தொடர்ந்து எடுத்துச் செல்வோம்!

அவர் மறைவால் வாடும் அவர்தம் குடும்பத்தாருக்கும் கோபி மாவட்டத் திருக்குறள் பேரவை அன்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேரறிஞர் டாக்டர்.வா.செ.குழந்தைசாமி அவர்களின் மறைவு "அறிஞர் உலகில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்".

கருருக்கு அருகே வாங்கலாம்பாளையம் என்ற குக்கிராமத்தில் பிறந்து உலகம் போற்றும் பேரறிஞராகச் சாதனை படைத்தவர்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களின் துணைவேந்தராகப் பணியாற்றியவர்.

" வாழும்வள்ளுவம்","தாய்மொழி பெறாததைச் சமுதாயம் பெறாது", உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசைகளில் தமிழ் போன்ற சிறந்த நூல்களைப் படைத்தவர்.

வாழும் வள்ளுவம் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் ஆகும். திருக்குறளின் பொதுமைத் தன்மையை, காலம் கடந்து வாழும் அதன் அமரத்தன்மையை இந்நூலில் விளக்கியுள்ள பாங்கு அருமையானது.

எளிய குடும்பத்தில் பிறந்தவர் இவர். இல்லினாயிச பல்கலைக்கழகத்தில் நீர்வளத்துறை இலக்கியத்தில் இவரது கண்டுபிடிப்பு "குழந்தைசாமி மாதிரியம்" என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. கல்வி மற்றும் அறிவியல் துறைகளில் இவரது பங்களிப்புகளினால் 1992ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருதும் 2002ஆம் ஆண்டு பத்மபூசண் விருதும் பெற்ற பெருமைக்குரியவர்.

குலோத்துங்கன் என்ற பெயரில் இவர் இயற்றிய கவிதைகள் அற்புதமானவை.

செம்மொழித் தமிழ் நிறுவனத்தில் இயக்குநர் தேர்வுக்குழுவில் அவர் உடனிருந்து பணியாற்றுகின்ற நல்வாய்ப்பு நமக்குக் கிட்டியது. பல மேடைகளில் அவரோடு பங்கு கொள்ளும் நல்வாய்ப்பும் கிடைத்தது. நம் மீதும், நம் மகாசந்நிதானம் பாலும் மிகுந்த அன்பு கொண்டவர்! தம் வாழ்வின் நிறைவுப்பொழுதில் தம்மிடம் இருந்த அறிவுக் கருவூலமான நூல்கள் அனைத்தையும் ஏழை எளிய மாணவர்கள் படிக்கும் வகையில் கரூர் அருள்முருகன் பொறியியல் கல்லூரிக்கு நன்கொடையாக அளித்தார்.

நூல்கள் மட்டுமல்ல. வா.செ.குழந்தைசாமி அறக்கட்டளை மூலம் நூலகக் கட்டிடம் ஒன்றையும் ஏழை மாணவர்களுக்கு அர்ப்பணித்தார். அந்த விழாவில் நாமும் கலந்து கொள்கின்ற நல்வாய்ப்பு கிட்டியது.

அதுதான் நாமும் அவரும் கலந்துகொண்ட கடைசி முக்கிய நிகழ்வாகும்.

தாய்மொழி (தமிழ்மொழி) வழியில் அறிவுச் செல்வத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வது அவருக்குச் செய்கின்ற உண்மையான அஞ்சலி ஆகும். எளிய குடும்பத்தில் பிறந்து உலகம் போற்றும் வகையில் அனைவரின் உள்ளங்களிலும் உயர்ந்தும் நிறைந்தும் விளங்கும் மகத்தான பேரறிஞரின் ஆன்மா அமைதி பெற எல்லாம்வல்ல இறையருளைப் பிரார்த்தித்து அவர் மறைவினால் வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

"வா!" என்ற வான்கருணை

மாணிக்கவாசகர் அன்பு ஒன்றினையே வேண்டி நின்றார். "உனக்கு நிரந்தரமாய் அன்பு எனக் கருளாய்" என்று வேண்டினார். அன்பினால் ஊனும் உயிரும் உருகும் வகையில் அழுது அழுது அடி அடைந்தவர் மாணிக்கவாசகர், அதனால், அவர்தம் திருப்பாடல்கள் ஊனினை உருக்குகின்றன; உள்ளொளியைத் தருகின்றன. "பாம்பறியும் பாம்பின் கால்" - இது பழமொழி. கற்றாரைக் கற்றாரே காமுறுவர். அடியார்கள், அடியார்களுடன் இணங்கி அவர்தம் நடுவுள் இருப்பதையே விரும்புவர். அடியார் கூட்டத்தில் தம்மை அங்கீகரித்துப் பேசுவாரை விரும்புவர். மாணிக்கவாசகர் இந்த இயல்புகளுக்கு விதிவிலக்கானவரல்லர்.

மாணிக்கவாசகருக்குக் கண்ணப்பரிடம் பக்தி. கண்ணப்பர் தம் தூய அன்பை, அவர் இயற்றிய வழிபாட்டை, வழிபாட்டின் சிறப்பை வியந்து உள்ளமெலாம் உவப்பப் பாராட்டுகின்றார்; பாராட்டி மகிழ்கின்றார்.

திருவுருவ வழிபாடு செய்தல் எளிதன்று. அது மிகவும் கடினமானது. திருவுருவத்தைக் கடவுளாகப் பாவிக்க வேண்டும். "திருக்கோயில் உள்ளிருக்கும் சிவன் தன்னைக் கண்டவர்க்குச் சிவனெனவே உறைவன் ஆங்கே!" என்பது சித்தியார். "திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பது திருவுருவமல்ல; கடவுளே" என்ற நம்பிக்கையுடன் வழிபட்டால் வழிபாடு இறைவனுக்குச் செய்தது ஆம்! அங்ஙனமின்றி திருவுருவம் என்று வழிபட்டால் வழிபாடு இறைவனுக்காகாது. இதனை மாணிக்கவாசகர்,

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே,
எங்களை ஆண்டு கொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில் திருவுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா

எதுஎமைப் பணிகொளு மாறு அது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே!

(திருப்பள்ளியெழுச்சி-7)

என்று பாடுவதறிக. "இது அவன் திருவுரு; இவன் அவன்" என்று வழிபடுதலே முறையான திருவுருவ வழிபாடு. திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பூசை செய்ய வேதம் கற்றிருக்க வேண்டும்; ஆகமங்கள் தெரிந்திருக்கவேண்டும். பூசைக்குப் பல்வேறு பொருள்கள் வேண்டும். இங்ஙனம் பல்வேறு பொருளைச் சாதனமாகக் கொண்டும் மந்திரங்களை உச்சரித்தும் வழிபாடு செய்ய வேண்டும்.

சிவகோசரியார் மரபுவழி - விதிமுறைப்படி பொருள் பற்றிப் பூசை செய்தவர். நாள்தோறும் பொன்முகலியாற்றில் நீராடி விதிமுறைப்படி பூசை செய்தல் சிவகோசரியாரின் வழக்கம். திண்ணனாருக்கு - கண்ணப்பருக்குப் பூசனை, பழக்கத்தில் இல்லாத ஒன்று. கண்ணப்பர் வேடுவர் குலத்தைச் சார்ந்தவர். அவர் இயற்பெயர் திண்ணனார். அவர், தோழன் வாயிலாக "மலை உச்சியில் குடுமித்தேவர் இருப்பார்; கும்பிடலாம்" என்று கூறக்கேட்டார். குடுமித் தேவரைக்காணும் ஆர்வம் திண்ணனாருக்குப் பொங்கி வழிந்தது. திண்ணனார் மலை ஏறுகிறார். உடற் சுமை குறைகிறது; ஆன்மா, தூய்மையுறுகிறது. திண்ணனாருக்கும் அவர்தம் அன்புக்குமிடையே போட்டி. திண்ணனாரின் அன்பு முன் செல்கிறது. திண்ணனார் குடுமித் தேவரைக் கண்டார். நிலமிசை வீழ்ந்து வணங்கினார்; எழுந்தார்; மீண்டும் வீழ்ந்து வணங்கினார்; காளத்தி அண்ணலை நோக்கினார் திண்ணனார் "காளத்தி அண்ணல் சாலப் பசித்திருக்கிறார்" என்று உணர்கிறார். "பொறுத்திரு! சடுதியில் சென்று உணவு கொண்டு வருகிறேன்" என்றார்; ஓடினார்; ஓடினார்; வேட்டையாடினார். பன்றியை அறுத்து இறைச்சியாக்கினார். அனலில் சுட்டார்; வாயில் போட்டுச் சுவை பார்த்தார். ஆனால் சுவையை அனுபவிக்கவில்லை. பக்குவப்படுத்திய இறைச்சியைத் தேக்கிலையில் எடுத்துக்கொண்டார். "என் அப்பன் காளத்தி அப்பன் குளித்திருக்க மாட்டானே!" என்று எண்ணினார். குளிப்பாட்டத் தன் வாய் நிறையத் தண்ணீரை எடுத்துக்கொண்டார். பூக்களைத் தலையில் எடுத்துக் கொண்டார்; விரைந்து காளத்தியப்பன் சந்நிதிக்கு வந்தார். திண்ணனார் வாயில் கொண்டுவந்த தண்ணீரைக் காளத்தியப்பர் மீது சொரிந்து

திருமஞ்சனமாட்டினார்; தலையில் இருந்த பூக்களை எடுத்துச் சூட்டினார். பின் கையில் தேக்கிலையில் கொண்டுவந்த ஊனை இறைவன் முன் படைத்து உண்ணுமாறு வேண்டினார். "நான் சுவைத்துப் பார்த்தேன் நன்றாக இருக்கிறது; உண்ணுக!" என்று இறைவனை வேண்டினார். மாலைப்பொழுது வந்தது; இருள் சூழ்ந்தது. "அப்பனே இருட்டில் தனியாக இருக்கிறாயே! துணை வேண்டாமா?" என்றெல்லாம் நீள நினைத்தார். இரவெல்லாம் விழித்து நின்று காத்தார்.

இந்தப் பூசை ஆகம வழிப் பூசையல்ல. புனல், பூ, தூபம், தீபம், மணியோசை முதலியன இல்லை. திண்ணனாரின் இந்தப் பூசையை இறைவன் விரும்பினார்; திண்ணனார் மெய்தீண்டும் பொழுதெல்லாம் மெய் குளிர்ந்தான். இதனால் வேடர் திண்ணனாரின் அன்பு, அன்பின் ஆற்றல் தெரிந்தது. முடிவு என்ன? பொருட்பற்றிச் செய்கின்ற பூசைகள் இறைவன் விரும்புவன அல்ல. அருச்சனை என்னும் வெறும் வயல் மட்டுமே பரந்து கிடந்தால் பயனுண்டோ? அந்த அர்ச்சனை வயலுள் அன்பை விதைக்க வேண்டாமா? இறைவன் மலைதான்! ஆனால், அன்பெனும் பிடியுள் அவன் சிக்குவான்! சிவகோசரியார் செய்த பூசை பொருளைப் பற்றிச் செய்த பூசை. திண்ணனார் செய்த பூசை அன்பு பற்றிச் செய்த பூசை. அதனாலன்றோ சிவகோசரியாருக்குக் கண்ணிடந்து அப்பும் பேறு கிடைக்கவில்லை. திண்ணனாருக்கு அந்தப் பேறு கிடைத்தது ஏன் கண்ணிடந்து அப்ப வேண்டிய நிலை? காளத்தியப்பருக்குக் கண்ணில் உதிரங்கொட்டல் நோய், வரவழைத்துக் கொண்ட நோய். திண்ணனாரின் அன்பை - அன்பின் பெருக்கை அளந்து காட்ட வேண்டும், சிவகோசரியாருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும்! அன்பைப் புலப்படுத்துவன, அன்பின் அளவைப் புலப்படுத்துவன கண்கள்தாம். திண்ணனாரின் அன்பை யாருடைய கண்கொண்டு அளப்பது? அளந்தறிவது? எவருடைய கண்களும் - காளத்தியண்ணல் கண்களும் கூட, திண்ணனாரின் கண்களைக் கொண்டேதான் பார்க்க வேண்டும்; பார்த்து அனுபவிக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான் காளத்தியப்பருக்குக் கண்ணில் உதிரப்பெருக்கு ஏற்பட்டது! பொருட்பற்றிப் பூசனை செய்த சிவகோசரியார் செயலற்றவராகிறார். திண்ணனார் விரைந்து செயற்படுகிறார்; தமது கண்ணை இடந்து அப்புகிறார். திண்ணனார் கண்ணப்பராகிறார்! அன்பு கண்ணப்பராகிறது! கண்ணப்பர் அன்பின் பிழம்பாய்த் தெரிகின்றார். கண்ணப்பரை ஆட்கொண்டருளிய

இறைவன் தன்னையும் ஆட்கொண்டருளியதை வியந்து பாடுகின்றார், மாணிக்கவாசகர்.

பொருட் பற்றிச் செய்கின்ற
பூசனைகள் போல் விளங்கச்
செருப்புற்ற சீரடி
வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார்
சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருட்பெற்று நின்றவா
தோணோக்கம் ஆடாமோ! (திருத்தோணாக்கம்-3)

கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில்
என்னையும் ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை
வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே
சென்றூதாய் கோத்தும்பீ! (திருக்கோத்தும்பீ-4)

இன்றைய திருக்கோயில் வழிபாட்டு நிலையில் பொருட்பற்றிச் செய்கின்ற பூசைகளே பெருகி வளர்ந்து வருகின்றன. பொருட்பற்றிய பூசையிலும் கூடத் "தான்" கெடாமல் செய்யும் பூசைகளே மிகுதி. தான் கெடாதது மட்டுமன்றித் தன்னுடைய தேவைகளை, இல்லை, இல்லை அவாக்களை அடுக்கி வைத்து அருள்பாலிக்கும்படி வேண்டிச் செய்யும் வணிகத் தன்மை வாய்ந்த பூசைகளே மிகுதி! "வேண்டத்தக்கது அறிவோய்" என்றும் "வேண்டுவதும் உந்தன் விருப்பன்றே!" என்றும் தொழுது அழும் பக்தர்கள் தேடினாலும் கிடைப்பதில்லை. இன்று எங்கும் அன்பு வழிபாடு அருகி, ஆசையினால் இயற்றும் வழிபாடே மலிந்துவிட்டது. திருக்கோயில் சூழலும் "சிவகோசரியார்"களைத் தோற்றுவிப்பதற்காகவே உள்ளது. "கண்ணப்பர்கள்" உருவாகும் சூழல் அறவே இல்லை. பழங்காலத்தில் சிவாச்சாரியார்கள் திருவுருவங்களில் இறைவனை "ஆவாகனம் செய்து" எழுந்தருளச் செய்து வைத்தனர். அவ்வாறு எழுந்தருளச் செய்தபின் பக்தர்கள் நேரிடையாக மூர்த்தியின் திருமேனி தீண்டிப் புனலும் பூவும் சொரிந்து வழிபடவும், அணைத்து

உச்சிமோந்து வழிபாடியற்றவும் உரிமைகள் இருந்தன. தானே வழிபாடியற்றுதல்தான் - செய்வதுதான் நல்ல வழிபாட்டுப் பயிற்சி முறை. இந்த வழிபாட்டு முறையில்தான், "கண்ணப்பர்கள்" தோன்ற முடியும். நாடு முழுவதும் உள்ள திருக்கோயில்களின் வரலாறுகளைப் படித்தால் இந்த உண்மை புலனாகும். திருமுறைகளில், பக்தர்கள் திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனியைத் தீண்டி வழிபாடியற்றினர் என்பதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. அப்பரடிகள் பாடிய திருவையாற்றுப் பதிகத்தில் வரும்,

> *"போதொடு நீர் சுமந் தேத்திப்*
> *புகுவார் அவர் பின் புகுவேன்"*

என்ற அடியை நினைவு கூர்க.

பக்தர்கள் அனைவரும் திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனியைத் தீண்டி வழிபடும் உரிமை இன்றும் வடபுலத்தில் - காசி முதலிய திருத்தலங்களில் நடைமுறையில் உள்ளது. இதனால் என்ன குறை வந்துவிட்டது? சம்பிரதாயம் என்ற பெயரில் பொருட்பற்றிச் செய்யும் பூசையை மட்டுமே வளர்த்து அன்பையும் அன்பைப் பற்றாகக் கொண்டு செய்யும் வழிபாட்டையும் புறத்தே தள்ளி, இறைவனிடமிருந்து பக்தர்களை அந்நியமாக்கினால் என்ன செய்வது? காலப் போக்கில் மக்கள் திருக்கோயில்களிலிருந்து விலகுவர். இதனைத் திருமுறை ஆர்வலர்கள் சிந்தனை செய்க! (தொடரும்)

உலகத்திலுள்ள எல்லா மொழிகளுக்கும் இல்லாத சிறப்பு நம் தமிழ்மொழிக்கு உண்டு. வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தது நம் தமிழ்மொழி. அகம், புறம் ஆகிய இரண்டையும் இரு கண்களாகப் போற்றியது நம் தமிழ் மொழி.

கல்வி மதிப்பெண் அடிப்படையில் இல்லாது மனிதத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். நமது பண்பாட்டுத் தடத்தை நாம் மீட்டெடுக்க வேண்டும். விருந்தோம்பல் நம் பண்பாடுகளுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. வாழ்க்கைக்குத் தேவையானது அன்பும், நட்பும்தான்.

நல்ல நண்பர்களைத் தேடிக்கொண்டால் வாழ்க்கையில் வெற்றி உண்டு. எனவே இன்றைய இளைஞர்களை உயர்ந்த இலக்கை நோக்கிப் பயணிக்கச் செய்ய வேண்டும். அதற்கு அவர்களுக்கு நல்ல அறநெறிகளையும், தமிழ்ப் பண்புகளையும் போதிக்க வேண்டும். திருக்குறளை நம் வாழ்க்கைத்திட்டத்தில் சேர்த்தால் மணிமுடியை நோக்கி பயணிக்கமுடியும்.

(காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் கருத்தரங்க நிறைவு விழாவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

"பூழியர்கோன்" "பாண்டிக்கொடுமுடி" ஓர் ஆய்வுச் சிந்தனை

(தருமையாதீனப் புலவர்.வித்துவான். தா. குருசாமி தேசிகர்)

"பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி" என்று "நின்றசீர் நெடுமாற நாயனாரை", அடையாளங் காட்டும் உமாபதிசிவம், நெடுமாற பாண்டியனைப் "பூழியர்கோன்" என்று புகழ்வார். "பூழியர்கோன்" என்பது யாது? அதுவே நமது முதல் ஆய்வாகும்.

பூழிநாடு யாது?

"பூழிநாடு" என்பது சேர நாட்டின் "மலையாளநாடு" வடபகுதியில் உள்ளது. சேரர்கட்குச் சொந்தமான இப்பூழிநாட்டை, பூழிநாட்டுக்கும் வடபகுதியில் உள்ள துளு நாட்டு மன்னன் நன்னன் என்பவன் கைப்பற்றிக்கொண்டான். சேரன் செங்குட்டுவன் அண்ணன் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் என்பவன் போர்செய்து பூழிநாட்டை மீட்டிக் கொண்டான் என்பது பதிற்றுப்பத்து, அகநானூறு மூலம் தெரியவரும். இதுபற்றி ஓரளவு ஆய்வு செய்தவர் வேண்டுதல் வேண்டாமை இலாத ஆய்வறிஞர் மயிலை வேங்கடசாமியார் ஆவார். "பூழிநாடு" இன்று கள்ளிக்கோடு என வழங்குகிறது. துளுநாடு தென்கன்னடம் என்று வழங்குகிறது.

எல்லாம் தமிழ்வேந்தர் :

சேர சோழ பாண்டியர் அனைவரும் கொங்குநாட்டில் குறுநில மன்னராயிருந்த அரசர்கள் பலரை வென்று, தம் எல்லையை விரிவுபடுத்திக்கொண்டனர். மேற்குமலைத் தொடர்ச்சிக்கு கிழக்கேயிருந்த கீழ்கொங்கு நாட்டுக் குறுநில மன்னர்களை வென்று சேர அரசர்கள் தென்கொங்குநாட்டைச் சிறிது சிறிதாக கைப்பற்றினர். சேரஅரசரும் துளுநாட்டை ஆண்ட நன்னன் போன்ற தமிழ் அரசர்களும், கொங்கு நாட்டைக் கைப்பற்றுவதைக் கண்ட சோழ, பாண்டியர்களும், கொங்குநாட்டில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சி செய்தனர்.

இவ்வாறு, கொங்கு நாடு, கடைச்சங்க காலத்தின் இறுதியில் கி.பி. 2ஆம் நூற்றாண்டில்,. தமிழ் அரசர்களின் போர்க்களமாக இருந்தது என்றுமயிலையார் துளுநாட்டு வரலாற்றில் பதிவுசெய்வார்.

பசும்பூண் பாண்டியன் :

இப்பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மூன்றுதலைமுறைக்கு முன் இருந்தவன். இப்பசும்பூண்பாண்டியன், சேரன் செங்குட்டுவன் தமையனான, களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலின் காலத்திலிருந்தவன். கொங்குநாட்டின் காவிரிக்கரை மலை தாண்டி துளு நாடு வரையில் சிலவற்றை போர் மூலம் வென்று கைப்பற்றிக் கொண்டான். அவர்களில் அதிகமான் பரம்பரையைச் சார்ந்த, நெடுமிடல் அஞ்சி என்பவன் பாண்டியனுக்குக் கீழடங்கி, அவ்வஞ்சி பாண்டியனுக்குச் சேனைத் தலைவனாக அமைந்தான். பசும்பூண் பாண்டியன் கொங்கு நாட்டை வென்று சில பகுதிகளை கைப்பற்றிக் கொண்டதை அகநானூறு 253ம் செய்யுள்,

"*வாடாப்பூவிற் கொங்கர் ஒட்டி*
நாடுபல தந்த பசும்பூண்பாண்டியன்" என்று கூறுகிறது.

துளுநாட்டுப் போர் :

"துளுநாடு" முன்பு தமிழ்நாடாக இருந்தது. இதை ஆண்ட மரபினர். நன்னன் என்ற குறுநில மன்னர்களாவார். இன்று தென்கன்னடம் என்று வழங்குகிறது. வடகொங்கு நாட்டைக் கைப்பற்ற முயன்ற நன்னன்மரபினர், பசும்பூண்பாண்டியனின் படை எடுப்புக் கொண்டது அறிந்து பகைவராயினர். இப்பாண்டியற்கு, நெடுமிடல் அஞ்சி உதவியாக வந்துபோர் செய்து, அப்போரில் தோல்வியடைந்தான். அஞ்சி கொல்லப்பட்டான். இதை அறிந்த கொங்குநாட்டார் அதிகமான் நெடுமிடல் அஞ்சி இறந்ததைக்கேட்டு, மகிழ்ச்சியடைந்ததாக குறுந்தொகை 39ஆம் பாட்டு,

"*கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்*
பசும்பூண்பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடுபட்ட ஞான்றை
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பு"

என்று பதிவு செய்கிறது. இதில் பசும்பூண்பாண்டியனின் துளுநாட்டுப் போர் தோல்வியாக முடிந்தது என்று அகநானூறு செய்யுள் 142ம் கூறுகிறது.

சேரர் வெற்றி :

பாண்டியன் போர்முடிந்தபிறகு துளுநாட்டின் மேல் சேரன் போர் தொடுத்தான். சேரன் செங்குட்டுவனுடைய தமையனான களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், இரண்டாவது போரில் வெற்றிபெற்றான் என்று பதிற்றுப்பத்து பதிவு செய்கிறது. துளுநாடு சேரர்க்கு ஆட்பட்டது. கண்ணனூர் திருக்கோகர்ணம், மங்களூர் என்று துளுநாடு இன்று வழங்குகிறது. பசும்பூண்பாண்டியன் கி.பி.2ம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்று உத்தேசமாக மயிலையார் கூறுவார். நெடுஞ்செழியப்பாண்டியனின் மூன்று தலைமுறைக்கு முந்தியவர் என்றும் கூறுவார்.

பாண்டியன் நினைவு :

"பசும்பூண் பாண்டியன்" சேரநாட்டின் ஒரு பகுதியான, பூழி நாட்டையும், கொங்குநாட்டில் அதிகமான் நெடுமிடல் அஞ்சி துணையோடு பல சிற்றரசர்களையும் வென்றிருக்க வேண்டும் என்பது ஆய்வுச் செய்தியாகும். காவிரி வளைந்து பாயும், இடமே இன்று கொடுமுடி என்று வழங்குகிறது. "முன்பு" "கறையூர்" என்று சங்க காலத்தில் வழங்கப்பட்டது. சிவபெருமானுக்கு ஒருபெயர் "கறைக்கண்டன்" என்று திருமுறைப்பதிவு செய்யும். "கறைக்கண்டன்கழலடியே காப்புக்கொண்டிருந்த கணம்புல்ல நம்பி" என்பது சுந்தரர்வாக்கு. இக்கொடுமுடி கொங்குநாட்டில் வெற்றிபெற்ற பசும்பூண் பாண்டியன் நினைவாக, பாண்டிக்கொடுமுடி என்று பெயர் பெற்றது.

சுந்தரர் வாக்கில் :

"கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரில் பாண்டிக்கொடுமுடி" என்ற, ஏழாந்திருமறை, கோயில் பெயரைக் "கறையூர்" என்றும், பாண்டியர் வெற்றிக் கடையாளமாக "பாண்டிக்கொடுமுடி" என்று ஊர்ப் பெயரும் வரப்பெற்றன. இதனை அறியாமல் "கொடுமுடி" மாமேருவின் சிகரங்களில் ஒன்று என்றும் பிரமன்மால் வழிபட்டுத் தனித்தனியே இவ்வாயலத்தினுள், கோயில் கொண்டுள்ளனர் என்றும், இதை அறியாதார் இத்தலத்தைத் திரிமூர்த்தி என்று வழங்குகின்றனர் என்றும்,

இங்கு ஒரு பாண்டியனுக்குக் கறை (குற்ற) தீர்ந்த, காரணத்தால், இது கறையூர் என்றும் வழங்குகிறது, என்று காசிமடம் திருமுறைப்பதிப்பில், குறிப்புரை காணப்படுகிறது. இது ஆய்வில் தவறான செய்தி என்பதை சங்க நூல்களால் அறியலாம்.

முடிந்த முடிபு :

கன்னடமும் களிதெலுங்கு மலையாளம் துளுவும் முன்பு தமிழ்நாடாகவே இருந்தன. அக்காலத்தில் வாழ்ந்த "பசும்பூண் பாண்டியன்" சிவபெருமான் எழுந்தருளியுள்ள கொங்குநாட்டுக் கறையூரில் தங்கி வழிபட்டுச் சிறப்பித்த காரணத்தால், "கொடுமுடி" தேவாரக் காலத்தில், அவன் நினைவாகப் "பாண்டிக்கொடுமுடி" என்று பெயர் பெற்றது என்பது ஆய்வு முடிவு. இது போலவே, இப்பசும்பூண் பாண்டியன் சேர நாட்டின் வடபால் இருந்த "பூழி" நாட்டை வென்ற நினைவாக கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த நெடுமாறபாண்டியனுக்கும், உபசார வழக்காக "பூழியர்கோன்" என்ற அடைமொழி வரப்பெற்றிருக்கிறது. கி.பி. 10ம் நூற்றாண்டில் வாழ்ந்த சந்தானாசாரியார் உமாபதி சிவம் காலத்திலும், "பூழியர்கோன்" என்ற தொடர் வழங்கப்பட்டு வந்ததை நினையும்போது, எட்டுத்தொகை நூல்கள் மூலமாக அறியும் வரலாற்றுச் சிந்தனை, தமிழ்விருந்தாகும். சேரர், கொங்கர், துளுவர் வரலாறு எழுதிய பேரறிஞர் மயிலை சீனிவேங்கடசாமி ஆய்வுகள் வணங்கிப் போற்றுதற்குரியதாகும்.

கோபி பேராசிரியர் **கா. அரங்கசாமி** மறைவு

திருக்குறள் பேரவையின் வைரத் தூணாகவும் அறிஞர்குழு உறுப்பினராகவும் திகழ்ந்த கோபி. பேராசிரியர் கா. அரங்கசாமி அவர்கள் 30.10.2016 அன்று காலமானார். இப்பெருமகனார் திருக்குறள் பேரவையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு உழைத்தவர். "மக்கள் சிந்தனை"யில் தொடர்ந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிவந்த அறிஞர் குன்றக்குடி ஆதீனத்தின் "தமிழாகரர்" பட்டம் பெற்றவர். இவர் தம் மறைவு திருக்குறள் பேரவைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்தம் குடும்பத்தினருக்கும் திருக்குறள் பேரவை அன்பர்களுக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றது. *– ஆசிரியர்*

உலகத் திருக்குறள் பேரவை முதன்மைப் பொதுச்செயலாளர் ந.மணிமொழியன் காலமானார்



உலகத் திருக்குறள் பேரவை முதன்மைப் பொதுச்செயலாளரும் மதுரை நியூ காலேஜ் ஹவுஸ் அதிபருமான திரு. ந. மணிமொழியன் சென்னையில் 13.11.2016 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார் என்பதை "மக்கள் சிந்தனை" மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

திருக்குறள் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் 1973-இல் தொடங்கிய திருக்குறள் பேரவையின் கிளை அமைப்பாக மதுரை மாநகரில் திருக்குறள் பேரவையை 38 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கி மிகச்சிறப்பாகத் திருக்குறள் பணியாற்றி வந்தவர். அதுமட்டுமின்றி இப்பேரவை கிளையின் முதன்மைப் பொதுச் செயலாளர் பொறுப்பில் அமர்ந்து நாடு முழுவதும் சென்று சென்று திருக்குறள் நெறியைப் பரப்பி வந்தவர். இவர்தம் திருக்குறள் பணியை வெகுவாகப் பாராட்டி அதன் நிறுவனர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமான் அவர்களால் "திருக்குறள் செம்மல்" என்னும் விருது வழங்கப்பெற்றவர். இப்போதைய உலகத் திருக்குறள் பேரவைத் தலைவரான தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களால் "திருக்குறள் பணி அரசு" என்னும் பட்டம் பெற்றவர். மதுரை திருக்குறள் பேரவை உறுப்பினர் அனைவரையும் தமது சுற்றத்தார்களாகவே நேசித்துப் பணிகொண்டவர். மதுரையில் பல திருக்குறள் விழாக்கள் எடுத்து மக்களிடையே திருக்குறள் நெறி பரப்பும் பணியை மிகச் சிறப்பாக ஆற்றிவந்த பெருந்தகை.... உலகத் திருக்குறள் பேரவை மாநில மாநாட்டை தமது காலேஜ் ஹவுஸ் அரங்கிலேயே நடத்திப் பெருமை சேர்த்தவர்.

உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று திருக்குறள் நெறி பரப்பியவர். மலேசியா, கனடா, இலண்டன், உள்ளிட்ட வெளிநாடுகளிலும் உலகத் திருக்குறள் பேரவைக் கிளைகளைத் தொடங்கிவைத்தவர். திருக்குறள் பயணம் முதலிய நான்கு இலக்கிய நூல்களை எழுதியவர். இத்தகைய மணிமொழியன் வாய்திறந்தால் குறள்மணிகளே அதிகம் உதிரும். இப்பெருமகனாரின் மறைவு உலகத் திருக்குறள் பேரவைக்கு இட்டு நிரப்ப முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உலகத் திருக்குறள் பேரவை உறுப்பினர்களுக்கும், அன்பர்களுக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது.

– ஆசிரியர்

இது ஒரு பண்பாட்டின் தொடர்ச்சி....

(24.9.2016 ஆம் நாள் சென்னையில் எம்.எல்.எம். கல்யாணமண்டப அரங்கில் கவிதா பப்ளிகேஷன் 40-ஆம் ஆண்டு விழாவில் தலைமை ஏற்று குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆற்றிய பேருரையின் சுருக்கம்)

செட்டிநாட்டுக்கும் செந்தமிழுக்கும் இடையிலான உறவும் அதன் திறமும் நாடறிந்த செய்திகளே. நம்முடைய மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு சிலப்பதிகாரம், மணிமேகலைக் காப்பியங்களின் மூலச் சுவடிகளை வழங்கியதே நம்முடைய செட்டிநாட்டு மண்தான். அன்று, அப்படித் தொடங்கிய இலக்கியத் தேடல், இலக்கியப் பதிப்பு, இலக்கிய வெளியீடு என்று இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது வெறும் பதிப்பு வெளியீடு, அல்லது நூல் வெளியீடு என்று மட்டும் நாம் கருதிவிட முடியாது; இது ஒரு கலைவாழ்வின் பண்பாட்டுத் தொடர்ச்சி ஆகும். அறுபது ஆண்டுகளுக்கு முன் நமது பெருமைக்குரிய "அருணோதயம்" அருணன் அவர்கள் வழிகாட்ட, பதிப்புத்துறையில் அடியெடுத்துவைத்த நமது சேது. சொக்கலிங்கம் அவர்கள் இன்று மகத்தான வெற்றியைச் சாதித்திருக்கிறார்.

- "கவிதா பதிப்புத் தடம் நாற்பது" என்ற ஆவணப்படம் உருவாக்கமும் 105 - புத்தகங்கள் வெளியீடும் ஒரு அரை நூற்றாண்டுக் காலத் தமிழின், தமிழ் வளர்ச்சியின் வரலாறு ஆகும். கவிதா பதிப்பகம் நாற்பது ஆண்டுகள் நடந்து, இயங்கி, நமது தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு முகவரி தந்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ் மக்களே, மூளையைப் பத்திரமாய், பாதுகாப்பாய் வைத்திருந்தால் போதாது; அதைப் பயன்படுத்தவும் வேண்டும் என்று அறைகூவி அழைத்து, இயங்கி வந்திருக்கிறது கவிதா பப்ளிகேஷன்! அதன் வெளிப்பாடுதான் இன்றைய விழா என்று கருதுகிறோம். ஒரு நூல், ஒரு புத்தகம் வெளியாகிறது என்றால், அதற்கு முன்னால் எத்தனை, எத்தனை ஆக்கப் பணிகள் நடந்துள்ளன என்று நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். தேடுதல், தொகுத்தல், பகுத்துக் கொள்ளுதல், கட்டுமானம், காலத் தேர்வு என்று பின்னணியில் பல்வேறு பணிகள் திட்டமிடப்பட்டு முறையாக நடைபெற்ற பின்னர்தான் ஒரு நூல், ஒரு புத்தகம் வெளிவந்து நம்முடைய கைகளுக்குக் கிடைக்கிறது. வெள்ளைத்தாளில் மை பூசுவது அல்ல நூல்வெளியீடு என்பது. நமது சமுதாயத்தில் மண்டிக் கிடக்கும் இருளை விரட்டி, சமுதாயத்தின் மீது வெளிச்சம் பாய்ச்சி, உயர்ந்த ஞானத்தை வழங்குகிற உயர்ந்த பணிதான் புத்தகம் பதிப்பித்தலும் வெளியிடுதலும். இந்தப் பணியை

நம் செட்டி நாட்டின் தொடர்பணியாக, இன்று, இங்கு, சென்னையில் ஆற்றிவருகிறார் நமது சேது சொக்கலிங்கம் அவர்கள்.

நமது சேது சொக்கலிங்கம் அவர்கள் திருமடத்துக்கு மிகவும் உரிமை உடையவர்கள். இந்த உரிமையும் உறவும் நமக்கு மிக்க மகிழ்ச்சிதரும் செய்தியாகும். கவிதா வெளியீட்டகத்துக்கும் அருணோதயம் வெளியீட்டகத்துக்கும் எப்படி ஓர் இலக்கிய வரலாற்றுத் தொடர்பு உண்டோ, அப்படி நம்முடைய திருமடத்துக்கும் கவிதா வெளியீட்டகத்துக்கும் ஓர் ஆத்மார்த்தமான தொடர்பு உண்டு. நமது திருமடம் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தில் மிக முக்கியமான பொறுப்பு வகிக்கின்றது. தேவகோட்டை கலை இலக்கியப் பெருமன்றத்தில் சேது சொக்கலிங்கத்தின் தந்தையார் சேதுராமன் அவர்கள் முக்கியமான பொறுப்பேற்றுப் பங்காற்றியவர். நமது குருமகாசந்நிதானம் அவர்களால் பலமுறை பாராட்டப்பெற்றவர். தேவகோட்டை கலை இலக்கியப் பெருமன்றம் நடத்திவந்த வரலாற்றுச் சிறப்புமிக்க "பாரதிவிழா கவிதா ஊர்வலத்தில், ஆண்டு விழாக்களில் உயர்திரு சேதுராமன் அவர்களது இசைப்பங்களிப்பு மிகவும் குறிப்பிடத் தக்கதாக, மக்களை ஈர்ப்பதாக அமைந்திருந்தது என்பதை இங்கே பெருமையுடன் குறிப்பிட்டாக வேண்டும். தேவகோட்டை கலை இலக்கியப் பெருமன்றம் தொடர்ந்து நடத்திவந்த "இலக்கியங்கள் மறுவாசிப்பு" "கூடி விவாதித்தல்" போன்ற நிகழ்வுகளில் சேதுராமன் அவர்களது பங்களிப்பு குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும். இவற்றின் வரலாற்று ரீதியான நீட்சிதான், வளர்ச்சிதான் இன்றைய "கவிதா-40 ஆம் ஆண்டு" என்று நாம் சுட்டிக்காட்டி வாழ்த்துகிறோம். நம்முடைய அருமைக்கும் பெருமைக்கும் உரிய பேராசான் ஜீவா அவர்களால் தொடங்கப்பட்ட தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் இன்று தமிழகத்தில் அறிவுசார்ந்த ஒரு பல்கலைக் கழகமாகப் பணியாற்றி வருகிறது. அந்தப் பெருமன்றத்தின் தேவகோட்டைக் கிளையில் நமது கவிதா சொக்கலிங்கம் அவர்கள் புரவலராக அமைந்து பணியாற்றுகிறார் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இங்கே குறிப்பிட்டு வாழ்த்துகிறோம். சுருக்கமாகச் சொன்னால் நாம் இங்கே ஓர் இலக்கிய வரலாற்றுக் குடும்பமாகக் கூடியிருக்கிறோம்; அத்தகைய சாதனையை நமது கவிதா சொக்கலிங்கம் பெருமித உணர்வோடு அமைத்துக் காட்டியிருக்கிறார்.

மானுடத்தின் நீண்ட, நெடிய வரலாற்றில் புத்தகங்களின் வரலாறு மகத்தானது; மாண்புகள் நிறைந்தது. ஒரு வகையில் புத்தகங்கள்தான் வரலாற்றைப் புனிதப்படுத்தி இருக்கின்றன; புரட்டிப் போட்டிருக்கின்றன; பல்வேறு காலக் கட்டங்களில் புத்தகங்களே ஆயுதங்கள் ஆகி, மகத்தான மாற்றங்கள் புரிந்திருக்கின்றன. அதனால்தான் புரட்சியாளர் லெனின், இளைஞர்கள் மத்தியில் உரையாற்றியபோது, "ஒரு முறை சொல்கிறேன்,

படியுங்கள்" "இரண்டாம் முறை சொல்கிறேன், படியுங்கள்" "மூன்றாம் முறையும் சொல்கிறேன், படியுங்கள்" என்று வலியுறுத்திப் பேசினார்.

இந்த அரங்கில், இந்த விழாவில் நாம் இன்னொரு மிக முக்கியமான செய்தியைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறோம். திருக்குறளில் வள்ளுவர் "வாழ்க்கைத் துணை நலம்" என்ற ஓர் அபூர்வமான தொடராக்கம் தருகிறார். அந்த வாழ்க்கைத் துணைநலம் என்பதன் ஒளிமிகுந்த பொருள் இங்கே மிளிர்கிறது. சேது சொக்கலிங்கம், அவர்களுடைய துணைவியார், இந்த இணையர்களின் அருமைப்புதல்வி கவிதா, கவிதாவின் கணவர் சிபி, இவர்களது குழந்தைச் செல்வங்கள் - இவர்கள் அனைவரும் வாழ்க்கையில் ஒருவருக்கு ஒருவர் துணை நின்று இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க "கவிதா-40" நிகழ்வை, விழாவை வளரும் சமுதாயத்துக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். வள்ளுவர் சொன்ன "வாழ்க்கைத் துணைநலம்" இதுதான் என்று பெருமை பாராட்டுகிறோம்; வாழ்த்துகிறோம். இந்தப் பாதையில், இந்தத் திசையில் இன்னும் நம்மை நோக்கிப் பணிகள் காத்திருக்கின்றன; அனைவரும் இணைந்து பயணிப்போம், வெற்றிகள் குவிப்போம் என்று வாழ்த்துகிறோம்.

(செய்திக்கட்டுரை நமது சிறபபுச் செய்தியாளர் : "முமு")

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்

சிலம்பில் தொல்காப்பியப் பதிவு – III

(தமிழாகரர். தெ. முருகசாமி)

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தைப் பொறுத்தமட்டில் தனி எழுத்துக்கள் பற்றி நூல் மரபு உணர்த்த, மொழியிடை நின்ற எழுத்துக்கள் பற்றி மொழிமரபு உணர்த்த, பிற இயல்களுள் எழுத்துக்களின் பிறப்பு பற்றிப் பிறப்பியல் உணர்த்த, ஏனைய இயல்கள் யாவும் எழுத்துக்களின் சொற்புணர்ச்சிபற்றிக் கூறுவனவாக உள்ளன.

அந்த வகையில் சிலப்பதிகாரத்தில் கதை தழுவிய பாங்கில் தொல்காப்பிய இலக்கணக்கூறு இளங்கோவடிகளால் பதிவு செய்துள்ளதை முன்னர் இருகட்டுரையில் கண்டதுபோலவே ஈண்டும் உணர்வோமாக!

கோயில் என்ற சொல்லை இளங்கோவடிகள் ஆண்டவனது ஆலயமாகவும் அரசனின் அரண்மனையாகவும் கூறுகிறார்.

பூம்புகாரில் இந்திரவிழா நடந்தபோது பிறவாயாக்கைப் பெரியோன் (சிவன்) கோயில் முதலாக முருகன்கோயில், பலராமன் கோயில், திருமால் கோயில்களிலும் வேள்விகள் நடந்தனபோல "மாலை வெண்குடை மன்னவன் கோயிலிலும்" வேள்வி நடந்ததாம்.

இவ்வாறே கவுந்தியடிகளுடன் கோவலனும் கண்ணகியும் மதுரைப் புறஞ்சேரியில் தங்கியிருந்து புறப்பட்டபோது மதுரையின் ஆலயத்திலும் மன்னனின் அரண்மனையிலும் இசைத்த இசை முழக்கங்களைக் கேட்டதாக இளங்கோ கூறுகிறார்.

அருந்தெறல் கடவுள் அகல்பெருங் கோயிலும்
பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்
பால்கெழு சிறப்பின் பல்லியம் சிறந்த...

இங்ஙனம் ஒரே சூழலில் ஆலயத்தையும் அரண்மனையையும் கோயில் என்பதாகவே சுட்டி வரும் இளங்கோவடிகள் வழக்குரை காதையில்,

வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகி...

கண்ணகி வழக்காட முற்பட்டபோதுள்ள சூழலில் கோயில் என்ற சொல்லைக் கதை தழுவிய பாங்கில் அரண்மனையைச் சுட்டுவதற்குத்

தொல்காப்பிய இலக்கண உணர்வு துணை செய்வதை ஈண்டு உணர்வோமாக!

சொற்புணர்ச்சியில், நிலைமொழி உயிர் ஈற்றெழுத்தும் வருமொழி முதல் உயிர் எழுத்தும் சேருங்கால் உயிரும் உயிரும் ஒன்று சேராததால் உடம்படுமெய் எழுத்துவரும் என்பது இலக்கண விதி.

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உம்படு மெய்யின் உருபுகொள வரையார் (எழுத்ததி.புணரி.38)

என்ற தொல்காப்பிய நூற்பா இன்ன இன்ன ஈறுகள் முன் உயிர்வந்தால் இன்னின்ன உடம்படு மெய் எழுத்துவரும் என்ற வரையறையைக் கூறவில்லை. ஆனால் உரையாசிரியர்களே அவைபற்றி விளக்கமாகக் கூறினர்.

இவ்வுரைக் குறிப்பைக் கொண்டு பவணந்தியார், நன்னூலில் -

இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் இருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.

(உயிரீற்.புண.12) கூறினார். இவ்விதிப்படி கோ+இல்=கோவில் என்பதே பொருத்தமாகும். ஆனால் பெரும்பாலான உலக வழக்கும் இலக்கிய வழக்கும் கோயில் என்பதாகவே கூறுவதால் இளங்கோவும் அச்சொல்லையே பயன்படுத்தினார் என்பதற்கும் மேலானதோர் இலக்கண வழக்கின் நுட்பத்தால் வழக்குரை காதையில் இருமுறை கோயில், கோயில் என்றார் எனலாம்.

எழுத்ததிகார உயிரீற்றுப் புணரியலில் ஓகார ஈறுபற்றிக் கூறி வருகையில் நிலைமொழி ஓகார வீற்றுக்குப் பக்கத்தில் குறில் எழுத்தான ஒகரம் எழுத்துப்பேறாக வரும் என்பது விதி. எடுத்துக்காட்டு ஓஒக்கடுமை. (ஓ என்ற ஓரெழுத்துக்கு மதகுநீர் தாங்கும் பலகை என்பது பொருள்).

இந்த ஓ என்ற எழுத்திற்குமுன் "இல்" என்ற உயிர்முதல் எழுத்துச் சொல் வந்தால் மேற்கூறியவாறு இடையில் குறில் எழுத்தான ஒகரம் வராமல் இயல்பாகவே சொல் அமையுமாம் எனச் சிறப்புவிதி கூறுகிறார் தொல்காப்பியர்.

"இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்" - (எழுத்து உயிர்மயங் 91) ஓகார ஈறுபற்றிக் கூறிவரும் தொடர்ச்சியில் இந்நூற்பா, ஓகாரமாகிய தனி எழுத்துடன் இல் என்ற வருமொழி சேருவது பற்றிக் கூறுவது போலிருப்பினும் அஃதல்லாத நிலையில் ஓகாரத்தை ஈறாகக் கொண்ட

"கோ" என்பதாகக் கூறிவிட்டதால் கோ என்பதன்றி வேறு சொல்லைக் குறிக்காதென்றே இந்நூற்பாவுக்கு உரை கண்ட அனைவரும் கூறினர்.

எனவே கோ+இல் = கோயில் என்றும் கோவில் என்றும் வரும்போது முன்னர் ஒகார ஈறுக்குக் கூறிய ஒகர எழுத்துப்பேறு வராதாம் என்பது கருத்து. அதாவது கோஒயில் என்றோ கோ3வில் என்றோ அமையாது என்பதாம்.

இப்படி, "இல்லொடு கிளப்பின் இயற்கையாகும்" என்ற நூற்பா சிறிதாக இருப்பினும் பல இலக்கணக் குறிப்பை உள்ளடக்கிய ஆலவிதை போன்ற நுட்பமுடையதாக உள்ளது.

முதலில் ஓகாரம் "கோ"வாக மாறி நிற்றல், இரண்டாவதாக, அங்ஙனம் மாறி நின்ற ஓகார ஈற்றில் (கோ), ஒகரமாகிய எழுத்துப்பேறு சேராமை. மூன்றாவதாக வருமொழியில் இல் வரவேண்டும். நான்காவதாக, சொற்கள் சேரும் வேற்றுமைப் பொருளில் இங்ஙனம் அமையும் என்பனபோன்ற நான்கு கருத்துக்களும் சிலப்பதிகாரக் கதையொடு பொருந்தியனவாக உள்ளன என்பதே இளங்கோவின் இலக்கண உணர்வை உணர்த்தும் எனலாம்.

கதையின்படி வழக்குரைக்க வந்த கண்ணகி அவளைக் காணும் அரண்மனை வாயில் காப்போன் ஆகிய இருவரின் செயல்களை இலக்கணப்படுத்தி உரைக்கவே இளங்கோவடிகள் 1. வாயில் வந்து கோயில் காட்ட என்றும் 2. கோயில் மன்னனைக் குறுகினன் என்றும் நெஞ்சையள்ளும் விதமாய் சொற்களைப் பயன்படுத்தினார் என்க!

இல்லொடு கிளப்பின் என்ற நூற்பாவின்படிக் கோயில் என்பது ஆண்டவனது ஆலயத்தையும் அரசனது அரண்மனையையும் குறித்தாலும் அந்நூற்பாவின்படி ஒகர எழுத்துப்பேறு வராது என்றதற்கேற்பச் சிலம்பின் கதைப்பாங்கில் கோயில் அரண்மனையைப் பற்றியது என முதலில் தெளிதல் வேண்டும்.

பாண்டியனைப் பார்த்து வழக்குரைக்க வந்த கண்ணகி, அரண்மனை வாயிலோனிடம், தான் மன்னனைக் காண அனுமதியைக் கேட்டுவரச் சொன்னவாறு அவனும் அரசனது உத்தரவைப் பெற்று வந்து கண்ணகியை உள்ளே போக வாயால் கூறாமல் கைகளால் சைகைகாட்டி உள்ளே போகச் செய்தான். இதைத் தான் கவிஞர், வாயில் வந்து கோயில் காட்ட என்றார். (வாயில் வந்து - வாயில் காப்போன் வந்து)

தொல்காப்பியர் இல்லொடு கிளப்பின் என்றவாறு கோவுடன் ஒகரம் சேராது கோயில் எனும் சொல் அமைந்ததோடு அங்ஙனம் அமைவதற்கேற்பவே "காட்ட" என்ற சொல்லை இளங்கோ கூறியதுதான் இலக்கணக் குறிப்பைக் கதையொடு தழுவிய இமாலய உச்சிக்குக் கொண்டு சென்றது எனலாம்.

உள்ளே போகலாம் என வாயால் சொல்ல வேண்டியவன் கண்ணகியின் படபடப்பைப் பார்த்த அச்சத்தால் வாயடைத்த நிலையில் கையாலேயே அரண்மனையின் உட்புறத்தைக் காட்டினான் வாயிலோன். உண்மையில் அவன் வாயில் காவலனாக இருந்தாலும் கண்ணகியுடன் வாயடைத்து நின்று சைகையைச் செய்ததால் வாய் இல்லாதவன் என்ற பொருள் பொருத்தத்தையும் இளங்கோ உணரச் செய்துவிட்டார். இந்தக் குறிப்பு எதை உணர்த்துகிறதெனில் ஓகாரத்துடன ஒகரம் இயல்பாக வரவேண்டியிருந்தாலும் அது (ஓகாரம்) கோ வாக மாறிய நிலையில் ஒகர எழுத்துப் பேறு அடங்கிவிட்டதாகத் தொல்காப்பியம் கூறிய இலக்கணக்கூறு பொருத்தமாய அமைந்துள்ளதன்றோ!

ஈண்டு ஒகர எழுத்துப்பேறு அடங்கிவிட்டதைக் "காட்ட" என்ற சொல் உணர்த்தியது போலவே அதாவது வாயிற்காப்போனாம் பாத்திரத்தின் மூலம் உணர்த்தியது போலவே இளங்கோவடிகள் கண்ணகியைக் கொண்டு உணர்த்தும் போதும் அதே கோயில் என்ற சொல்லைப் பயன்படுத்தியதோடு "குறுகினன்" என்பதும் கதை தழுவிய பாங்காகும்.

இயல்பாய் ஆரணங்காக இருந்த கண்ணகி பேரணங்காக மாறிய வேற்றுமையோடே அரண்மனையை அடைந்தாலும் அதைக் குறிக்கும் இளங்கோவடிகள் கோயில் மன்னனைக் குறுகினள் என்றதால் கண்ணகி வழக்கைத் தொடராத முன்பே மன்னன் தோல்வியால் அடங்கிவிட்டான் என்ற தொனிப்பொருள் உணருமாறு மன்னனைக் குறுகினள் என்னாமல் "கோயில் – மன்னனைக் குறுகினாள்" என்றதால் ஒகர எழுத்துப் பேறு அடங்கிவிட்ட இலக்கணக் குறிப்பின் மாட்சியின்படிக் கண்ணகி வழக்குரைப்பதால் பாண்டிய மன்னன் அடையப் போகும் இறப்பு நிலை – குறிப்பாக உணர்த்தப்பட்டதாம் என்க!

மேலும் வழக்கின் முடிவில் மன்னன் குறுகிவிடுவதுபோலவே கண்ணகியும் கொற்றவை கோயிலில் பொற்றொடி தகர்த்து சேர நாடடைந்து வானகம் ஏகினாள் என்பதால் அவளது வாழ்வு குறுகிவிட்ட நிலையையும் உணரவே குறுகினள் எனப்பட்டது போலும்!

ஆக, வழக்காட வந்தபோது உரைக்கப்பட்ட இளங்கோவின் சொல்லாகிய கோயில் என்பது – வாயிற் காப்போனாலும் கண்ணகியாலும் பாண்டிய மன்னனாலும் ஒகர எழுத்துப்பேறு அடங்கிய இலக்கண உணர்வுக்குப் பொருத்தமாய் அமைந்தது எனலாம்.

அடுத்து, "தன் மனைவி கண்ணகியுடனும் துறவி கவுந்தியடிகளுடனும் கோவலன் மதுரை செல்லும் வழியில் ஓரிடத்தில் இளப்பாறத் தங்குகின்றனர்; அப்போது அவன் மட்டும் ஒரு நீர் நிலை நோக்கிச் சென்றான்; அங்கு மாதவியால் அனுப்பப்பட்ட கோசிகமாணி என்பான் கோவலனைச் சந்தித்து மாதவி எழுதிக் கொடுத்த கடிதத்தைத்தர, அதைப் படித்த கோவலனுக்குப் பல்வேறு மனமாற்றங்கள் வருகின்றன; அவற்றுள் ஒன்றுதான், இக்கடிதம்; தான் தன் தந்தைக்கு எழுதியனுப்பினால் எவ்வாறிருக்குமோ அதுபோல் உள்ளதாக உணர்ந்து "எற்பயந்தோற்கிம் முடங்கல் பொருளுரை பொருந்தியுள்ளதால்" இதனைத் தன் தந்தையிடம் சேர்ப்பிக்கக்கோசிகமாமணியிடம் கூறியதுதான் கதை தழுவிய வகையில் இலக்கண நுட்பமுடன் அமைந்ததை" – இனி உணர்வோமாக!

பூம்புகாரை விட்டு யாரிடமும் கூறிக்கொள்ளாமல் புறப்பட்டதால் அவனது நெஞ்சத்தின் சுமையாக இருந்த உணர்வை இறக்கிவைத்துத் தணித்துக்கொள்ள கிடைத்த வாய்ப்பாக மாதவியின் கடிதம் இருந்ததை உளமார உணர்ந்த கோவலன் அக்கடிதத்தை "எற்பயந்தோற்கு" எனக் கூறித் திருப்பியனுப்பினான் என்பது துன்பியல் நாடக உத்தியை உயர்த்திக் காட்டுகிறது எனலாம்.

இதில் என்பயந்தோற்கு என்பதில் உள்ள னகரம் நகரமாகியதென்பது "அவைதாம், மெய் பிறிதாதல், மிகுதல், குன்றல்" என்று தொல்காப்பிய எழுத்ததிகாரப் புணரியலில் (7) மூவகையான எழுத்துத் திரிபுபற்றிக் கூறும் இலக்கண நூற்பாவின்படி மெய்பிறிதாதல் – என்றதால் என் – எற் என ஆனது. இதனால் கோவலன் தன்னை மட்டுமே கூறிக்கொண்டான் எனத் தெரிகிறது. ஏனெனில் தன்னைப் போலவே தன் மனைவி கண்ணகியும் தன் பெற்றோரைப் பிரிந்து வந்தவள் என்பதால் தன்மைப் பன்மையாக "எம்" எனக்கூறிப் பயந்தோற்கு என்ற ஒருமையைப் பயந்தோர்க்கு என்ற பாடபேதகமாய்ப் பன்மையாக இல்லாமல் பயந்தோற்கு என ஒருமையிலேயே கூறியதும் சிந்தனைக்குரிய இலக்கண உணர்வின்படி முழுமையான கதை தழுவிய பாங்கை உணர்த்துவதாக உள்ளது.

பயந்தோனுக்கு என்பதே பயந்தோற்கு என்றாவதும் னகரம் றகரமாக மாறிய மெய்பிறிதாதல் என்பதை உணர்த்தும்.

இதனால் கண்ணகியின் தாய் தந்தையரையும் தன் தாய் தந்தையரையும் உள்ளடக்கிய வகையில் பயந்தோர்க்கு என்னாமல் பயந்தோற்கு எனக் கண்ணகியை விலக்கியதோடு தன் தாந் தந்தையரில் தாயை விலக்கித் தந்தையை மட்டுமே சுட்டுமாறு கோவலன் உரைத்தான் என்பதுதான் இலக்கண நுட்பத்தில் கதையானது நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரக் கதையாய் ஒளிர்கிறது எனலாம்.

மாதவியின் கடிதத்தில் கோவலன் புகார் நகரை விட்டுப் பிரிந்திருக்கக்கூடாது என்ற உண்மையைச் சுட்டிக்காட்டவே "குரவர் பணியன்றியும்... இரவிடைக் கழிதற்கு" என்றாள். ஈண்டுக் குரவர் – என்றது கோவலனின் தாய் தந்தையரை உணர்த்திய பன்மைச் சொல்.

இந்தக் குறிப்பின்படியே கோவலன் சிலம்பை விற்கப் புறப்படும்போது, "இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்... எழுகென எழுந்தாய் என் செய்தனை" எனக்கூறியதில் தன் தாய் தந்தைக்குப் பணி செய்யாமல் இருந்த குற்றப் பின்னணியை எண்ணும்போது குரவர் என்பதைப் பன்மையாகவே கூறினான்.

இங்ஙனம் மாதவி கூற்றிலும் கோவலன் கூற்றிலும் குரவர் என்ற சொல் தாய் தந்தையரைச் சுட்டினாலும், கோவலன் மாதவி எழுதியனுப்பிய கடிதம்; எற்பயந்தோற்கு எனத் தன் தந்தைக்கு மட்டும் பொருந்துவதாகக் கோசிக மாணியிடம் கூறுவானேன்? என்பது சிந்தனைக்குரியதன்றோ!

ஈண்டுப் பயந்தோர்க்கு எனப் பன்மையில் கூறவேண்டியதை ஒருமையில் பயந்தோற்கு என்றதில் ஓர் இலக்கண உணர்வு பொருத்தமாக உள்ளது. அதாவது இஃது எழுத்திலக்கணம் பற்றியதாயினும் எழுத்தாலாவது சொல் என்ற அடிப்படையில் எழுத்தின் உண்மையைத் தொல்காப்பியத்தின் வழி உணர்த்துவதாகவே உணர வைக்கின்றார் இளங்கோ!

குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி என்பது சொல்லதிகாரக் கிளவியாக்கத்தின் நூற்பா (56) ஆகும். கூறுவோர் தம் கருத்தை இன்னதென்று தெளிவாகத் தெரிவிக்கும் சொற்களால் கூறவேண்டுமாம். இதன்படி இளங்கோ தெளிவாகவே பயந்தோற்கு என்பதைப்

பாடயேதத்திற்கிடமில்லாமல் ஒருமையில் கோவலனின் தந்தையையே சுட்டினார் என்க!

மங்கல வாழ்த்தில் கோவலனை மாசாத்து வான்மகன் என அறிமுகம் செய்தார் இளங்கோ. தாயிருந்தும அவள் சுட்டப்படவில்லை.

சிலப்பதிகார முடிவில் சேர செங்குட்டுவனுக்கு மாடல மறையவன் சோழ நாட்டின் நிகழ்வுகளைக் கூறும்போது, மகனின் இறப்பைக்கேட்ட கோவலனின் தந்தை, துறவுமேற்கொள்ள, தாய் இறந்துபடுகிறாள் - என்றான். "துறவோன் மனைவி மகன் துயர்பொறாஅள்... மெய்விடவும்" என்பது இளங்கோ வாக்கு.

இதில் ஓர் ஆடவனின் மன நிலையும் பெண்ணின் மனநிலையும் வேறுபட்டதாக இருந்ததை உணர்வதால் ஆடவனின் நெஞ்சுரம் பெண்ணிற்கிராது என்ற கருத்தின்படி, புகாரை விட்டுப் பிரிந்து மதுரைக்குப் போன கோவலன் அதாவது நாடு விட்டு நாடு போனவன் வருவானோ மாட்டானோ என்ற உணர்வைத் தாண்டி இறப்பதற்கான வாய்ப்பைத் தாய் பெற்றாலும் பெறக்கூடும் என்பதால்தான் இளங்கோ மாந்தர்களின் உளவியலின்படித் தாயை விலக்கி உணர்த்த - ?பயந்தோற்கு? எனக் கோவலனின் தந்தைக்காவதாகக் கூறிக் கடிதத்தைக் கோவலன் அனுப்புவதாகக் கதைப்பாங்கை இலக்கண உணர்வுடன் காப்பியத்தைத் துன்பியல் காப்பியமாகப் படைத்தார் இளங்கோ!

ஆக, தொல்காப்பியர் ஒகர எழுத்துப் பேறை நீக்கிக் கூறிய கோயில் என்ற சொல்லாலும் மெய்பிறிதாதல் என்ற எழுத்துத் திரிபான இலக்கணத்தால் எற்பயந்தோற்கு என்ற சொற்களாலும் கதை தழுவிய பாங்கை இளங்கோ உள்வாங்கி உணர்த்திய உன்னதத்தை என்னென்பது!

தமிழ் ஆட்சிமொழி எனும் சிறப்பிழந்து தாழ்த்தப்பட்டு வந்ததை உணர்ந்த திரிகூடராசப்பக் கவிராயர் தமிழரின் பிறமொழிக் காதலால் தமிழ் மொழிக்கு நேரவிருக்கும் கேட்டை உணர்கிறார். பிற சமயத்தவரான முகமதியர் படையெடுப்புகளினாலும், கிறித்தவர்களின் வருகையினாலும் தமிழ்ச் சைவ சமயத் தோற்றமும் மறைந்து போகக்கூடும் என்று அஞ்சுகிறார். தமிழின் தூயதன்மை பிறமொழிக் கலப்பால் சிதைந்துபோகுமோ என்று சிந்தை கலங்குகிறார். எனவே சிவபெருமானை நோக்கி தமிழையும் சைவத்தையும் காக்க வேண்டுமென வேண்டுகிறார்.

– **ஆ. முத்தையா** (இந்திய இலக்கியச் சிற்பிகள், திரிகூடராசப்பக் கவிராயர்)

தன்னை வெல்வான் – தரணியை ஆள்வான்

(கவிஞர். அ.சொ.சண்முகம், திருச்சி)

தன்னை வெல்லும் தாரக மந்திரம்
தனியொரு மனிதனின் சிந்தனை ஊற்று
உன்னை அறிந்தால் உலகை ஆளலாம்
என்பது தானே அறிஞரின் கூற்று.

பக்கத்து வீட்டில் பாயசம் மணக்கும்
பசித்த நம்வீட்டில் பழையது கிடைக்கும்
பாயசம் உனக்கு வேண்டு மென்றால்
உழைப்பின் திறத்தால் தானே கிடைக்கும்

தன்னை அறியாது தவணையில் வாங்கி
மகிழ்ச்சியில் வாழ மனதை வளைத்து
என்னென்ன தேவை என்றறியாமல்
எல்லாப் பொருளையும் வாங்கிக் குவித்து

சுகம்என்ற பெயரில் நாட்கள் செல்ல
சொந்த வரவும் குறைந்து போக
தவணை கட்ட மறுகடன் வாங்கிடில்
தரித்திர மன்றோ தலைவிரித்தாடும்

உண்ண உணவும் உடுக்க உடையும்
உன் வருவாயில் கிடைக்கும் தானே
தன்னை அறியாது பேராசைப்படின்
தன்னை வெல்வது எப்படி இயலும்

மதுக்கடைகள் மலிந்த இந்நாட்டில்
மனதை அடக்கும் ஆற்றல் இன்றேல்
மண்ணில் வீழ்ந்து கிடப்பதைத் தவிர
மண்ணை ஆள எப்படி முடியும்

கள்ளுண் ணாமையை வள்ளுவர் சொல்லியும்
கருத்தில் ஏற்றிட துணிவற்ற வற்கு
தன்னை வெல்கின்ற நுட்பம் தெரியுமா?
தரணியை ஆள்கின்ற ஆற்றல் கிடைக்குமா?

தன்னை வெல்வான் தரணியை ஆள்வான்
எப்படி என்பதை அறிந்தோர் அறிவர்;
உன்னைத் தோண்டி ஞானம் கண்டால்
உலகை ஆளலாம் என்பதே உண்மை

நல்வாழ்வுக்கு நான்கு நெறிகள்

(கலைமாமணி நெல்லை. ஆ. சுப்பிரமணியன்)

திருக்குறளில் ஒரே ஒரு குறளை வாழ்க்கை நெறியாகக் கொண்டாலே, நிச்சயம் உயர்ந்த நிலையினைப் பெறலாம்.

அந்தக் குறள், "நகை ஈகை இன்சொல் இகழாமை" என்ற அருமையான நெறிகளைக் கொண்டது!

அதாவது, நகை என்பது பொன்நகை அல்ல; புன்னகை! எந்தச் சூழ்நிலையிலும் நகைமுகம் காட்டி நிதானத்தைக் கடைப்பிடிப்பது.

அடுத்து ஈகை.. பணத்தால்தான் உதவலாம் என்பதல்ல; அளவும் அல்ல... தக்க சமயத்தில் ஒருவர்க்கு செய்யும் சிறு உதவிகூட மிகுந்த பயனைத்தரும். எனவே, தேவை பணம் அல்ல... பரிவு!... அந்தக் குணம் வேண்டும்.

அடுத்து இன்சொல்... பழம் இருக்கும்போது காயை நாடுவார்களா?... ஆறுதலாகச் சில வார்த்தைகள் சொல்வதற்குப் பணமா வேண்டும்?. இதைத்தான் திருமந்திரம், "பிறர்க்கு இன்னுரை" என்று உணர்த்துகிறது!.. ஆறுதலளிக்கும் இனிய சொல்தான் இன்சொல்!

அடுத்து இகழாமை... "மற்றவரிடம் குறை காண்பதைவிட, தன்னிடம் உள்ள குறைகளைத் திருத்திக்கொண்டாலே புகழத்தக்க தூய மனதைப் பெற்றுவிடலாம்" என்பார் தேசபிதா!

எனவே பிறரை இகழாமல், தன்னைத் திருத்திக் கொள்வதில் கவனம் செலுத்தவேண்டும்.

வாழ்வாங்கு வாழ்ந்து சீர் பெற, இந்த நான்கு நெறிகளைக் கொண்ட

"நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு"

என்னும் குறளை கடைப்பிடித்தாலே நாம் உயரலாம்.

மனிதப் புனிதர் வாழிய மாண்பு!

(தமிழாகரர். தெ. முருகசாமி)

1. "புனிதர்" பேரவை என்று சேக்கிழார்
2. நனிமிக உரைத்த நற்றமிழ்ச் சொல்தான்
3. புனிதர் என்ற புண்ணிய விருதாய்
4. மனிதருள் மிக்கமா மனித ரான
5. அன்னை தெரசா அருளப் பெற்றது
6. பொன்னை நிகர்த்தப் பொற்புடைத் தாகும்!
7. மரணமிலா அன்னார் வாழ்வின் பின்னால்
8. அரணாய் விருதை அளித்தது தகுதியே!
9. காயும் உதய சூரியன் தானும்
10. மாயும் தகுதி உண்டோ உலகில்?
11. தோயும் அந்த உண்மையைப் போலத்
12. தாயுளத் தெரசா தாங்கினார் புனிதர்!
13. துறவறம் என்பது விரிந்த உறவறம்!
14. அறப்பாரு ளான அதன்அற் புதத்தை
15. ஒட்டு மொத்த உயிர்க்குலம் பேணும்
16. பட்டு மேனிப் பண்பார் தெரசா
17. தொண்டலால் தூயத் துணையிலை என்று
18. பண்டே உரைத்த அப்பர் மொழிக்குக்
19. கொள்கை வடிவில் குவலயந் தன்னில்
20. உள்ளும் பெருமைக் கிலக்கண மாகத்
21. தந்த புனிதர் விருது, யானைத்
22. தந்தம் போன்ற தனிப்புக ழுடையது!
23. அதனால் அன்னை தெரசா வாழ்வும்
24. இதமுறும் தொண்டும் எந்நா ளும்மே
25. தேயம் போற்றும் தெரசா புகழால்
26. நேயம் வளரும் நம்பா ரத்திலே!

உலகத் தமிழ்ச் சங்கமும் சென்னைப் பல்கலைக்கழகமும்
இணைந்து நடத்திய திருக்குறள் பன்னாட்டு மாநாடு
(சென்னை மியூசியம், 18,19, மே 2015)

கருத்தரங்கக் கட்டுரை

திருக்குறளில் இயங்கியல்

(Dialectics in Thirukkural)

00. தோற்றுவாய்

சங்க காலத்தில் திணைசார் மாந்தர் வாழ்வில் அகம், புறம் என்று இருந்த பாகுபாடு நீதி இலக்கிய காலத்தில் அறம், பொருள், இன்பம் என்ற பாகுபாடாக ஆயிற்று. திருவள்ளுவர் திருக்குறளை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பகுதிகளாக இயற்றியுள்ளார். அவர் தனிமனிதரிடத்தும், சமூகத்திலும் உள்ள எதிர்வுகளை / முரண்பாடுகளை இனங்கண்டு அவற்றின் ஒருமைப்பாட்டையும், விலகல்களையும் நுணுகி ஆராய்ந்து முப்பாலைப் படைத்துள்ளார். எனவே திருக்குறளை இயங்கியல் அணுகுமுறையில் (Dialectical Approach) ஆராயும் முயற்சி இக்கட்டுரையின்கண் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

01. கிரேக்க தத்துவத்தில் இயங்கியல்

கிரேக்கச் சொல்லான 'Dialektos' என்பதிலிருந்து ஆங்கிலச் சொல்லான 'Dialectics' என்பது பெறப்பட்டது. கிரேக்கர்கள் உரையாடல் (Dialogue). சொல்லாடல் (Discourse), வாதாடல் (Debate) ஆகிய அனைத்தையும் குறிக்க 'இயங்கியல்' என்ற பொருளைத் தரும் 'Dialectics' என்பதைப் பயன்படுத்தினர்.

02. இந்தியத் தத்துவத்தில் இயங்கியல்

சகலமும் இயக்கத்தில் உள்ளன. அவை பரஸ்பர உறவு கொண்டவை என்ற புத்தரது தத்துவத்தில் இயங்கியல் உள்ளது. சாங்கியத்தின் பரிணாமவாதமும், காரண - காரியத் தொடர்பை விளக்கும் சத்காரியவாதமும் இயங்கியல்அடிப்படை கொண்டவை. பக்தி இலக்கிய காலத்தில் இந்தியாவில் இருமை எதிர்வுகளைக் கடந்து எதிரெதிர் கூறுகளை முழுமைப்படுத்தி இணைவாக்கத்தை வலியுறுத்த

சிவசக்தி இராதாகிருஷ்ணன், மீரி - பீரி கோட்பாடுகள் தோன்றின என்பது ந. முத்துமோகன் கூற்றாகும். (இயங்கியல் பொருள்முதல்வாதம் ஓர் அறிமுகம், பக்.11 - 16).

03. ஹெகலின் இயங்கியல் தத்துவம்

ஹெகலின் இயங்கியல் தத்துவம் கருத்து முதல்வாத அடிப்படை கொண்டது. பரிபூரண ஆன்மா இயற்கையாகவும், சடப்பொருளாகவும் தன்னைப் புறவயப்படுத்திக் கொண்டு மனிதர்களாகவும், அவர்களது ஆசாபாச உணர்ச்சிகளாகவும் விளங்குகிறது. அந்தப் புறவயப்படுத்த வடிவங்களின் இயக்கமே மொத்த உலக வரலாறு என்று அவர் கூறுவார். பரிபூரண ஆன்மாவில் தொடங்கி பரிபூரண ஆன்மாவில் முடிவது ஹெகலின் கருத்து முதல்வாத இயங்கியல் (மேலது).

04. மார்க்சின் இயங்கியல் தத்துவம்

மார்க்சின் இயங்கியல் தத்துவம் ஹெகலின் தத்துவத்தைத் தலைகீழாகப் புரட்டிப் போடுவது. பொருளில் (Matter) இருந்துதான் கருத்தும் (idea), சிந்தனையும் (Thought) தோன்றுகின்றன என்பது மார்க்சீயப் பொருள் முதல்வாதத் தத்துவம். பொருளுக்கு மற்றவற்றுடன் உள்ள பன்முக உறவுகளின் முழு மொத்தம், அதன் வளர்ச்சி, இயக்கம் பற்றியது மார்க்சீய பொருள்முதல்வாத இயங்கியல் தத்துவம் (மேலது).

05. இயங்கியல் - ஒத்திசைவு, போராட்டம்

வாழ்க்கையை அதன் எல்லா முரண்பாடுகளோடும் (opposites) புரிந்து கொள்ள உதவுவதே இயங்கியல். வாழ்வில் மாறுதலுக்கும், வளர்ச்சிக்கும் உந்து விசையாக இருப்பன முரண்பாடுகளே. முரண்பாடுகள் ஒருமைப்பாடுடன் / ஒத்திசைவுடன் இருக்கலாம். இது நேச முரண்பாடு. முரண்பாடுகள் போராட்டமாகவும் இருக்கலாம். இது பகை முரண்பாடு. இதனை 'Unity and Diversity of the opposites' என்பர்.

முரண்பாடுகளின் ஒத்திசைவையும் போராட்டத்தையும் அடியிற்கண்டவாறு வகைப்படுத்துவர் :

1. அடிக்கட்டுமானம் X மேற்கட்டுமானம்
2. பொருள் X சிந்தனை
3. நிகழ்வு X சாராம்சம்

4. முழுமை X பகுதி
5. காரணம் X காரியம்
6. பொதுவானது X தனித்தது
7. தற்செயலானது X தவிர்க்க இயலாதது
8. யதார்த்தம் X வாய்ப்புகள்
9. தொடர்ச்சி X தொடர்ச்சி முறிவு
10. உள்ளடக்கம் X உருவம்
11. அளவு மாற்றம் X பண்பு மாற்ற

மேற்கூறிய இயங்கியலின் கூறுகள் திருக்குறள் கருத்துகளோடு இணைந்து நோக்கி ஆராயப்படுகின்றன.

1. அடிக்கட்டுமானமும் மேற்கட்டுமானமும்

போரில்லாத, பரத்தைமை இல்லாத, கள், களவு, கொலை இல்லாத அறம் சார்ந்த புதியதொரு இலட்சிய சமுதாயத்தைப் படைக்க வள்ளுவர் விரும்பினார். அறம் ஈகையை மட்டும் குறிப்பதன்று; ஒழுக்கத்தையும் குறிப்பது. திருக்குறளின் அடிக்கட்டுமானம் அறமே; பொருளும், இன்பமும் அதன் மேற்கட்டுமானங்கள். 'அறம் செல்வமும் ஈனும்' (31), 'அறத்தான் வருவதே இன்பம்' (39) எனும் அவர் வாக்கே அதற்குச் சான்றாவது. மாந்தர் அறவழியில் பொருளீட்டி, இன்பம் துய்த்துப் பிறரையும் துய்ப்பிக்க வேண்டும் என்பது அவர் வேணவா.

திருக்குறளில் அடிக்கட்டுமானமான அறமும், மேற்கட்டுமானங்களான பொருளும் இன்பமும் ஒன்றோடொன்று பரஸ்பரம் இயங்கியல் உறவு கொண்டுள்ளன.

2. பொருளும் கருத்தும்

'அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு'. (757)

அருள் - குழவி, அன்பு - ஈன்ற தாய், பொருள் - செவிலித்தாய் என உவமிக்கும் வள்ளுவர், பொருள் இல்லாவிடில் அருளும் அன்பும் உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்க இயலாது என்று கூறியுள்ளார். அப்பொருளும் 'தீதின்றி வந்த பொருளாக' (754) இருத்தல் வேண்டும் என்பார். அவரது சொல்லாடல்களில் பொருளும், பொருளைப் பற்றிக்

கூறுகின்ற கருத்துகள், சிந்தனைகள் யாவும் அறம் என்ற கட்டளைக் கல்லில் உரசி வெளிப்படுகின்றன. 'பொருளி லார்க்கு இவ்வுலகம் இல்லை' (247), அதனால் 'செய்க பொருளை' (759) என்று மாந்தரை ஏவுகிறார். பொருளை அறக்கருத்தோடு இணைந்து இயங்கியல் உறவில் கூறியுள்ளார்.

3. நிகழ்வும் சாராம்சமும்

நிகழ்வு என்பது சம்பவம்; நிகழ்வுகளுக்கு இடையிலான உட்தொடர்புகள் சாராம்சம் (Essence) எனப்படுவது.

ஊழலும், கையூட்டுப் பெறுதலும் நிகழ்வுகள் என வைத்துக் கொண்டால், அந்த நிகழ்வுகளை அர்த்தப்படுத்த அவற்றின் உட்தொடர்புகளை அறிந்தால்தான் அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும். 'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்' (755) என வள்ளுவர் கூறுவது இலஞ்சத்தையும் கையூட்டையுமே. பிறன் பொருளை வெஃகுதற்குக் காரணம் பொறாமை (171, 178), அதாவது, பிறன் ஆக்கம் கண்டு அழுக்காறு கொள்ளுதலும் (163), சிற்றின்பம் துய்க்க வேண்டும் என்ற பேராசையும் (172) காரணமாவன. அதனால் விளையும் தீமைகளைக் கூற வள்ளுவர் தவறவில்லை. குடி கெடும் (171), பழி வரும் (172) என்றார். வெஃகாமையினால் விளையும் நன்மைகளையும் அடுக்குகிறார். வெஃகாதவனைத் தேடி வந்து திருமகள் தங்குவாள்; அவனுக்கு வெற்றி மேல் வெற்றி குவியும் (179, 180) எனக் கூறிக் 'கையூட்டுப் பெறாதே' என அவர் கண்டிக்கிறார்.

இலஞ்சமும், கையூட்டும் தலைவிரித்தாடும் வேளையில் அதற்கான உட்தொடர்புகளை ஆராய்ந்து தடுக்க வேண்டியது நீதித்துறையின் கடமையாகிவிடுகிறது.

4. முழுமையும் பகுதியும்

சமூகத்தின் ஓர் அலகு குடும்பம். குடும்பம் இன்றிச் சமூகம் இல்லை. சமூகம் என்ற முழுமைக்குள் குடும்பம் என்ற பகுதி உள்ளது. சுற்றம், நட்பு, விருந்தினர், துறவிகள், முன்னோர் ஆகியோரைப் பாதுகாப்பது குடும்பத்தினர் கடமை (43, 42).

குடிமக்கள், மன்னவனை / ஆட்சியாளரைச் சார்ந்து

வாழ்கின்றனர். ஆட்சியாளர் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் சார்ந்து வாழ்கின்றனர். உலக மக்கள் இயற்கை தரும் கொடையான மழையைச் சார்ந்து வாழ்கின்றனர்.

பகுதியும் முழுமையும் ஒன்றையொன்று சார்ந்தவை; ஒன்றோடொன்று பரஸ்பர உறவு உள்ளவை. இந்த தேச உறவு சில வேளைகளில் போராட்டமாக மாறிப் பகை உறவாகவும் மாறலாம். பல் குழுவும், பாழ் செய்யும் உட்பகையும், கொல் குறும்பும் ஒரு நாட்டில் இருப்பின் அது மக்களுக்கும் கேடு; ஆட்சியாளருக்கும் கேடு. வான் பொய்த்துவிட்டால் உள்நின்று உடற்றும் பசி.

இங்ஙனம் முழுமைக்கும், பகுதிக்கும் உள்ள இயங்கியல் உறவினைத் திருக்குறள் விரிவாகக் கூறுகிறது.

5. காரணமும் காரியமும்

பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதல் இன்றைய அறிஞர் வரை காரணமின்றிக் காரியமில்லை என்பர். சாங்கியம் இதனை 'சத்காரியவாதம்' என்னும். ஐன்ஸ்டீன், 'Every action has a reaction' என்பார்.

உழவன் நிலத்திற்குச் சென்று உழாவிடின் நிலம் புலந்து இல்லாளின் ஊடி விடும் (1039) என்பது வள்ளுவம். 'பருவத்தே பயிர் செய்' என்பது பழமொழி. உழவுத் தொழிலாகிய உழைப்புச் செயல் காரணம்; பயிர் விளைச்சல் அதன் காரியம். விளைச்சல் இன்மை காரணம்; அவன் குடும்பமே பட்டினி கிடப்பது காரியம்.

'மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து' (603)

பட்டினியால் குடும்பமே மடியும் என்று காரண காரியத் தொடர்பை, இயங்கியல் உறவோடு விளக்குவது வள்ளுவம். எந்த ஒரு அறத்தையும், செய்க - செய்தால் பயன் - செய்யாவிடில் தீமை என வலியுறுத்துவது வள்ளுவம்.

6. பொதுவானதும் தனித்துவம்

'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு' (397)

என்ற திருக்குறள் கல்வியின் சிறப்பைப் பேசுகிறது. ஒரு தனிமனிதன்

அவன் கற்ற கல்வியின் சிறப்பு காரணமாக எந்த நாடும் தன் சொந்த நாடு; எந்த ஊரும் தன் சொந்த ஊர் என்று பொதுமையை நோக்கி நகர்ந்து செல்ல இயலுகிறது.

தனியான பொருட்கள், தனியான நிகழ்ச்சிகள், தனியான போக்குகள் ஆகியவை உலகிலுள்ள மற்றவற்றுடன் ஆயிரக் கணக்கான மாற்றங்களால் இணைக்கப்பட்டுள்ளன என்பது இயங்கியல் தத்துவம். ஊருணி, பழுமரம், மருந்துமரம் ஆகியவை தனித்தவை. அவை பிறர்க்கு உதவும் பான்மையால் பொதுமையை நோக்கி நகர்கின்றன. நச்சுமரம் நச்சப்படாமல் இயக்கமற்று நிற்கிறது (1008).

பேரறிவாளனிடம் செல்வம் இருப்பின் அது பொதுநலத்திற்குப் பயன்பட்டு கல்வி நிலையங்களாக, மருத்துவமனைகளாக, நூலகங்களாக, பூங்காக்களாக மலர்கின்றது. அதனால் தனிமனிதரால் பலர்நலம் பெறுகின்றனர்.

இவ்வாறாக, தனித்தது பொதுமை நோக்கியும், பொதுமை தனித்தது நோக்கியும் நகர்ந்து செல்லும் இயங்கியலைத் திருக்குறள் பல இடங்களில் எடுத்துரைத்துள்ளது.

7. தற்செயலானதும் தவிர்க்கவியலாததும்

ஆழிப்பேரலை தோன்றி அலை அலையாய் மக்களைக் கொண்டு செல்கிறது; எரிமலை வெடித்து ஊழித் தீயெனக் கிளம்பி மக்களை எரித்துக் கொல்கிறது; நிலநடுக்கத்தால் எண்ணற்ற மக்கள் நிலைகுலைந்து இருக்க இடமின்றி, குடிக்க நீரின்றி, உண்ண உணவின்றித் தவிக்கின்றனர். எதிர்பாராது நிகழும் இந்தத் தற்செயல் 'Accidental' நிகழ்வுகளையே வள்ளுவர்,

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்' (380)

என்றார்.

(தொடரும்)

நெல்லை மாவட்ட உலகத் திருக்குறள் பேரவை

நெல்லை மாவட்ட உலகத் திருக்குறள் பேரவை சார்பில் பாளையங்கோட்டை மாநிலத் தமிழ்ச்சங்கத்தில் திருக்குறள் 27வது தொடர் சொற்பொழிவு கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முன்னாள் மாவட்டக் கல்வி அலுவலர் அ. இராசகிளி தலைமை வகித்தார். நல்லாசிரியர் வை. இராமசாமி, சித்தாந்தத் தென்றல் தி. இராமன் முன்னிலை வகித்தனர். திருக்குறள் திருமதி. கி. பிரபா இறை வேண்டல் பாடினார். திருக்குறள் இரா. முருகன் வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் பாவலர் இளமுனைவர். மு.ச. காசாமைதீன் திருக்குறளில் மனம் என்னும் பொருள்பற்றி சிறப்புரையாற்றினார். விவேகானந்தர் மன்றச் செயலாளர் பா. சுந்தரம் நன்றி கூறினார்.- தொழிற்சங்கத் தலைவர் திரு. ஆவுடையப்பன், முன்னாள் மாவட்டப் பதிவாளர்கள் ந. இராசகோபால், பாஷ்யம், எஸ். கலீல்ரகுமான் மற்றும் திரளான தமிழன்பர்கள் கலந்து கொண்டனர். காசாமுகைதீன்

சிறப்பாசிரியருக்கு கடிதம்....

ஆடி - ஆவணி மக்கள் சிந்தனை இதழின் தலையங்கம் சப்தஸ்வரம் போல ஏழு பக்கங்களில் அமைந்து, வரிக்குவரி உருக்கம் மேலிட வாசிக்க வைத்தது!


கட்டுரை நிறைவில் ஓர் மழலைமலர், அடிகளின் கரங்களைப் பற்றி இனிப்பு வழங்கியதை மனத்திரையில் கண்டபோது தெய்வப்புலவரின், "அமிழ்தினும் ஆற்ற இனிதே..." தமிழ்மறையை நினைப்பூட்டியது!

"அன்புதான் வாழ்க்கை" என்ற நிறைவோடு பூரிக்கச் செய்த மனத்தை, மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் கீழ்க்காணும் புனிதமான சொற்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

"நல்லாவின் பால்முழுதும் கன்றுக் கில்லை;
நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை!
நெல்லாகும் கதிர்முழுதும் நிலத்துக் கில்லை!
நிறைகின்ற நீர்முழுதும் குளத்துக் கில்லை!
பல்லாரும் கனிமுழுதும் மரத்துக் கில்லை!
பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக் கில்லை!
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்!
என் வாழ்வும் பிறர்க்கென்ற இருத்தல் வேண்டும்". (ப.140)

- நெல்லை.ஆ.சுப்பிரமணியன்

குன்றக்குடியில்
மருது சகோதரர்கள் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை



குன்றக்குடி அருள்மிகு சண்முகநாதப் பெருமான் கோயிலில் அமைந்துள்ள சின்னமருது, பெரிய மருது உருவச்சிலைகளுக்கு பொன்னம்பல அடிகளார் மற்றும் கிராமத்தினர் மாலையணிவித்து திங்கள்கிழமை மரியாதை செலுத்தினார்.

மருது சகோதரர்கள் ஆங்கிலேயர்களால் அக்டோபர் 24-ஆம் தேதி தூக்கிலிடப்பட்டனர். இதனால் இன்றைய தினம் மருது சகோதரர்கள் நினைவு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. மருதுபாண்டியர்கள் சிவகங்கையை ஆட்சிபுரிந்த போது குன்றக்குடி கோயிலுக்கு திருப்பணி செய்துள்ளதாக வரலாறு உள்ளது. அப்போது கோயில் பிரகார மண்டபத்தில் பெரியமருது, சின்ன மருது ஆகிய இருவருக்கும் முழு உருவக் கற்சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. மருது சகோதரர்களின் நினைவுதினமான திங்கள்கிழமை குன்றக்குடி கோயிலில் உள்ள அவர்களது முழு உருவச் சிலை பட்டு சாத்தி அலங்கரிக்கப்பட்டு மாலையணிவித்து மரியாதை செய்யப்பட்டது. நிகழ்ச்சிக்கு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முன்னிலை வகித்தார். குன்றக்குடி திருமடத்தினர் மற்றும் கிராமத்தினர் கலந்துகொண்டு மருதுபாண்டியர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

குன்றக்குடியில் சாகித்திய அகாதெமியும் "தொடரும்" இதழும் இணைந்து தமிழில் 22.10.2016இல் நடத்திய சிறுவர் இலக்கிய இதழ்கள் – உரையரங்கம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரி அரங்கத்தில் 22.10.2016 அன்று காலையிலும், மாலையிலும் சாகித்ய அகாதமியும் தொடரும் இலக்கிய இதழும் இணைந்து நடத்திய "தமிழில் சிறுவர் இலக்கிய இதழ்கள்" பற்றிய ஒருநாள் உரையரங்கம் நடைபெற்றது.

காலை 9.30 மணியளவில் இறைவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. சாகித்திய அகாதெமியின் பொறுப்பு அலுவலர் திரு.அ.சு. இளங்கோவன் வரவேற்புரையாற்றினார். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமை வகித்தார், சாகித்திய அகாதெமி தமிழ் ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.சொ. சேதுபதி தொடக்கவுரையாற்றினார். சாகித்திய அகாதெமி தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் திரு. கி. நாச்சிமுத்து மையக்கருத்துரை வழங்கினார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரி பேராசிரியர் திரு. மோகன்ராஜ் வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்க முதல் அமர்வில் திருமதி. தேவிநாச்சியப்பன் "சிறுவர் இதழ்களில் புலனாகும் மொழி நடையும், கற்பனை உத்திகளும்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். தொடரும் இலக்கிய இதழ் ஆசிரியர் ஆ. கண்ணன் நன்றியுரை நவில முற்பகல் நிகழ்ச்சி நிறைவுற்றது.

பிற்பகல் 3 மணியளவில் கருத்தரங்கம் இரண்டாம் அமர்வில் திரு.மா. கமலவேலன் "சிறுவர் இதழ் ஆக்கங்களில் பாரம்பரிய கதைகளின் தாக்கமும் புதுமையாக்கமும்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். திரு.மு. முருகேஷ், "சிறுவர் இதழ்கள் வளர்க்கும் முத்திரைக்கலை" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். அதன்பின் சந்திரகாந்தன் நிறைவுறையாற்றினார். நன்றியுரைக்குப் பின் நாட்டு வாழ்த்துடன் உரையறங்கம் இனிதே நிறைவெய்தியது.

குன்றக்குடியில் 22.10.2016 அன்று நடைபெற்ற சாகித்திய அகாதெமியும் "தொடரும்" இதழ் இணைந்து நடத்திய சிறுவர் இலக்கிய இதழ்கள் - உரையரங்கத்தில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் ஆற்றிய தலைமை உரையின் சுருக்கம் ______

குழந்தைகளே இலக்கியம். ஒட்டுமொத்தமாக இலக்கிய வடிவத்தில் இருக்கிற குழந்தைகளை தனியாக பிரித்துப்பார்க்க இயலாது. எல்லாவற்றுக்கும் விளக்கம் சொன்ன திருவள்ளுவர் தான் குழந்தை இலக்கியத்தின் முன்னோடி.

குழந்தைகளின் நேசர் ஜவஹர்லால்நேரு, சிறைப்பட்ட காலத்தில் அவர் தனது அருமை மகளுக்கு எழுதிய கடிதம்தான் உலக வரலாறானது. அவர் அடிமனத்தின் ஆழத்தில் குழந்தை நேசராகவே இருந்தார். அதனால்தான் சட்டையில் அணிந்திருந்த ரோஜா மலரைப் போன்று குழந்தைகளை நேசித்தார். அதனால்தான் அவர் பிறந்த தினம் குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

குழந்தைகள் மலர்கள், அவர்களை ஒருபோதும் கசக்கிவிடாதீர்கள். குழந்தைகள் கண்ணாடி, கண்ணாடி முகம் காட்டுவதுபோல், நாம் எதை பிரதிபலிக்கிறோமோ அதைத்தான் குழந்தைகள் பிரதிபலிப்பார்கள். எனவே அவர்களை ஒருபோதும் நொறுக்கிவிடாதீர்கள். குழந்தைகள் புத்தகங்கள் ஒருபோதும் கிழித்துவிடாதீர்கள். அவர்களை வாசிக்க பழகிக்கொள்ளுங்கள். குழந்தைகள் ஒரு ஓவியம். அவர்களை ஒருபோதும் கலைத்துவிடாதீர்கள். அந்தக் குழந்தைகளுக்காக நீங்கள் வாழுங்கள் என்றார்.

"ஜனநாயகத்தில் மக்களே எஜமானர்கள்" என்ற உண்மையை உணர்ந்தவர் நேரு. பிரதமர் பொறுப்பேற்ற பின்பு, பஞ்சாப் மாநிலத்தில் ஒரு பொதுக்கூட்டம். பாதுகாப்பு வளையத்தை மீறி ஓர் ஏழை விவசாயி ஓடிவந்து, பிரதமர் நேருவின் சட்டையைப் பிடித்து உலுக்கிக் கேட்டார். "இந்தச் சுதந்திரத்தால் எனக்கு என்ன கிடைத்தது? என் சுற்றம் முழுவதும் சீரழிந்தது" என்றார். நேரு அமைதியாக, "ஒரு நாட்டுப் பிரதமரின் சட்டையைப் பிடித்து உலுக்கிக் கேள்வி கேட்கும் உரிமையை இந்தச் சுதந்திரம்தானே உங்களுக்குத் தந்தது!" என்றார். – பொன்னம்பல அடிகளார்

(அன்பே வாழ்வு - பக்.124)



குன்றக்குடி

அருள்தரு சண்முகநாதப் பெருமான்

கந்தசஷ்டி விழா

குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருக்கோயில் கந்தசஷ்டி விழா 30.10.2016இல் தொடங்கி 7.11.2016 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. 30.10.2016 தேவரகசியம் நிகழ்வு நடந்தது. 31.10.2016 முதல் 5.11.2016 மதியம் வரை திருவருள்திரு சண்முகநாதப்பெருமானுக்கு இலட்சார்ச்சனை நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் இரவு அருள்தரு சண்முகநாதன் திருவீதியுலா வந்து அன்பர்களுக்கு அருட்காட்சி வழங்கினார். 5.11.2016 ஆறாம் திருநாள் அன்று மாலை 4.30 மணியளவில் வெள்ளி ரதத்தில் எழுந்தருளி அன்று மாலை சூரனைத் தடிந்து ஆட்கொண்ட நிகழ்வு நடைபெற்றது. அதுபோது சஷ்டிவிரதம் கடைபிடித்த ஆயிரக்கணக்கான அன்பர்களும் பொதுமக்களும் இத்திருக்காட்சியைக் கண்டு அருட்செல்வம் பெற்றனர். 6.11.2016 ஏழாம் திருநாள் பகல் 11.00 மணியளவில் அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்கு மகாபிஷேகமும், மாலை 6.30 மணியளவில் தெய்வானை திருமணமும் நடைபெற்றன.

இரவு 8 மணியளவில் அருள்தரு சண்முகநாதப் பெருமான் தங்கரதத்தில் எழுந்தருளி திருவீதி உலா வந்து பொதுமக்களுக்கு காட்சியளித்துச் சேர்க்கை சேர்ந்தார். விழா இனிதே நிறைவெய்தியது.

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)
குன்றக்குடி - 630 206
Phone: 04577 - 264567 Mobile : 94433 64200


குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இயக்குநர்
மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி, 2. அழகுக்கலை, 3.லெதர் & ரெக்ஸின் பொருட்கள் தயாரித்தல், 4. பற்றவைப்பு (ஆர்க் & கேஸ் வெல்டிங்), 5.செல்போன் பழுது நீக்குதல், 6. T.V, Radio- பழுது நீக்குதல், 7. எம்ப்ராய்டரி 8. பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், 9.வீட்டு வயரிங் வேலை செய்தல், 10. இரண்டு சக்கர வாகனம்பழுது நீக்குதல், 11. ஆபரண நகை தயாரித்தல், 12. திரை அச்சு வேலை, 13. சேலை டிசைனிங், 14. கைவினைப் பொருட்கள் தயாரித்தல், 15.பொம்மைகள் தயாரித்தல், 16. காகித உறை மற்றும் பைகள் தயாரித்தல், 17. வீட்டு உபயோகப்பொருட்கள் பழுது நீக்குதல், 18. உணவுப் பொருட்கள் தயாரித்தல், 19. பேப்ரிக் பெயிண்டிங், 20. சாக்பீஸ், மெழுகுவர்த்தி, பினாயில், சாம்பிராணி தயாரித்தல் 21. கயிறு திரித்தல், 22. GFRB பொருட்கள் தயாரிப்பு, 23. சேலை புதுப்பித்தல் சுருக்கம் நீக்குதல், 24. எலக்ட்ரானிக் சோக் தயாரித்தல், 25. கூடை முடைதல், 26.உல்லன் நிட்டிங் 27. நாப்கின் தயாரித்தல், 28. தையல் இயந்திரம் பழுது நீக்குதல், 29. போட்டோ லேமினேசன், 30. ஐஸ்கிரீம் தயாரித்தல் 31. காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல்,

தகுதி	:	*தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.*
பயிற்சி நேரம்	:	*பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.*
குறிப்பு	:	*ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.*



குன்றக்குடி மகளிர் கல்வியியல் கல்லூரியில் சாகித்திய அகாதெமியும், 'தொடரும்' இதழும் இணைந்து நடத்திய
சிறுவர் இலக்கிய இதழ்கள் - உரையரங்கம் / நாள் : 22-10-2016

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-Oct-Dec 2016

Price Rs. 8-00
Date of Publication 10-12-2016

பெறுநர்

திரு திருவருள்திரு சுவாமிகள் அவர்கள்,
கோவிலூர் ஆதீனம்,
கோவிலூர்,
மானகிரி-(அஞ்சல்),
காரைக்குடி-(வழி),



அச்சிட்டோர் சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி ☎ : 264166